விக்ருதி கார்த்திகை 1—12—'50. அனு நான்கு.

ஜகன் மோகினி

15

இவ்விதழில்

- ஒரு முழு நவீனம் — "வெற்றிப் பரிசு" வை. மு. கோ. 97-வது நாவல்
- வழக்கம்போல் இதர முக்கிய அம்சங்களும்

15
—
2-51

வெற்றிப் பரிசு

வை. மு. கோ. 97-வது நாவல்

இவ்விதழில் ஒரு முழு நாவல்!

JL
வை.மு.நாவ
N50. 2712

27-வது ஆண்டு

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
- திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி !
மனத்தைச் சார்ந்து.
- வீராகவ கவி

Vol.27 — விக்ருதி ஸ்ரீ — December.
No. 12. — கார்த்திகை மீ — 1950.

க்ஷேமலாபங்கள்

ஸ்ரீ கீதாசாரியனின் திருவருளால்இவ்விதமுடன் மோகினிக்கு 27-வது ஆண்டு பூர்த்தியாகி, நாளது ஜனவரி மீ 28-வது ஆண்டு மங்களகரமாக ஆரம்பமாகிறது. "கடந்த எட்டு ஆண்டுகளாக ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் விசேஷ மலர் வெளியிட்டு இணையற்ற தமிழமுதம் அளித்துவந்தீர்களே, நாளது ஜனவரியில் அத்தகைய பொங்கல் பரிசு வெளியிடப் போவதில்லையா? ஏன் நவம்பர் இதழில் வழக்கம்போல் அறிவிப்பும் ரிஸர்வேஷன் கூபனும் வெளியாகவில்லை?" என்று ஆர்வத்துடனும் அன்புடனும் நேயர்கள் கேட்டவண்ணமிருக்கிறார்கள்: அவர்களுக்குக் குதூகலமளிக்கும் செய்தியை இங்கு வெளியிடுகிறோம்.

சென்ற சித்திரை இதழில் (1-5-50) தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாக ஒரு முழு நவீனம் "கானகலா" வெளியிட்டு மகிழ்வித்தோமல்லவா? அத்தகைய விருந்தை அன்பர்கள் வரவேற்றதால் அது முதல் பிரதி மாதமும் ஒரு முழு நவீனமே வெளியிட்டுவருகிறோம்.

அநுஹேதயம் என்ற நாடகத்தை ரஸித்த அன்பர்கள் நமது ஆசிரியையின் முதன்முதல் ச்ருஷ்டியான "இந்திரப்யாஹ்" என்ற நாடகத்தைப் புதியபதிப்பு வெளியிடவேண்டுமென்று அவாவுடன் கோரினர். இது பல வருடங்களுக்கு முன்னமேயே செய்திருக்கவேண்டிய காரியமாகும்; ப்ராப்தவேளை இப்போதே வாய்த்தது;நமது98-வதுபுத்தகமாகஅதனை அச்சிட்டுவருகிறோம்.

நாளது ஜனவரிஇதழில் 99-வது நவீனம் "ரோஜா மலர்" வெளிவரும். பொங்கல் விருந்தாக "பாதாஞ்ஜலி"— 100-வது நவீனம் தனிப் புத்தகமாகச் சிறப்புடன் வெளிவரும்.

"சதக விழா நாவல்—பொங்கல் விருந்து !

உயரியகிளேஸ் பதிப்பு. பல படங்களுடன். விலை ரூ. 2. தான். புதுவருடச்சந்தா;ம், 100-வது நாவலின் கிரயமும் சேர்த்து ரூ.5. மணியார்டர் செய்வோருக்கு "பாதாஞ்ஜலி" முன்னதாக ரீஸர்வ் செய்யப்படும். உடனே முந்துங்கள்.

நூறாவது நாவல் வெளியிடும் வைபவத்திற்கு முக்யத்வம் கொடுப்பதற்[illegible]க்கமாக வருட ஆரம்பத்தில் வெளியிடும் மலரைத்தமிழ்வருட ஆரம்பத்திற்குஒத்திப்போட்டிருக்கிறோம்.

1940 ஸ்ரீ ஜனவரி மீ நமது "பொன் விழா" நாவல் ஆத்மசக்தி—50வது நாவல் சிறப்பாக வெளியாகி மகிழ்

183467.

அபூர்வ ராமாயணம்

5. க: ஸத்யவாக்ய:?

ஸ்ரீ ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

சென்ற இதழ் தொடர்ச்சி.

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் இது ஐந்தாவது வினா. குணவான்யாவன்? வீர்யவான் யாவன்? தர்மஜ்ஞன் யாவன்? க்ருதஜ்ஞன் யாவன்? என்னும் நான்கு வினாக்கள் விவரிக்கப்பட்டன. ஸத்யவாக்யன் யாவன்? என்கிற இந்த ஐந்தாவது வினா இனி விவரிக்கப்படுகின்றது.

ஸத்யவாக்யன் என்பதற்கு ஸத்யமே சொல்லுபவன் என்பது கருத்து. ஸத்யமாவது என்ன? என்பதைப்பற்றி முன்னம் ஆராய்ச்சி செய்யவேண்டும். 'உள்ளதை உள்ளபடியே கண்டு உள்ளபடியே சொல்லுவதுதான் ஸத்யம்' என்று உலகமெல்லாம் கொண்டிருக்கின்றது. இதை நம் ஆசாரியர்கள் ஆராயுமிடத்துச் சிறிது சிக்ஷித்துப் பேசுகிறார்கள். "உள்ளதை உள்ளபடியே கண்டு உள்ளபடியே சொல்லுவது" என்பதில், உள்ளதை உள்ளபடியே காண்பதென்பதையும் சேர்த்திருப்பது கூடாது; ஏனெனில்; உலகில் மனிதர்களுக்கு ஒன்றை வேறொன்றாக மயங்குகையாகிற மருள் ஸஹஜமானது. கயிற்றைக் கண்டு பாம்பு என்று மருள்வது மனிதர்களுக்கு ஸஹஜமேயன்றோ. இப்படிப்பட்ட ப்ரமங்கள் பலபல நேருமாதலால், அந்த ப்ரமத்தினால் ஒன்றை வேறொன்றாகத்தெரிந்துகொண்டவன் தான் தெரிந்துகொண்ட விதமாகவேயன்றோ பிறர்க்குச் சொல்லமுடியும். கயிற்றைக்கண்டு ஸர்ப்பமென்று மருண்டவன் பாம்பு பாம்பென்று கத்தினாலும், அங்கே ஸர்ப்பமுள்ளதென்று ஒருவரிடம் கூறினாலும் அது அஸத்ய வசனமாகவேண்டிவரும். உண்மையில் அது அஸத்ய வசனமாகாது. அவன் தான் கிரஹித்தபடியே யன்றோ சொல்லியிருக்கிறான். இது அவன் கருத்தால் ஸத்யவசனமேயொழிய அஸத்ய வசனமாகாது. "ஏனாகாது? இவன் அஸத்யமாகத்தானே க்ரஹித்துவிட்டான்; அது பிசகல்லவோ?" என்று சிலர் வாதிக்கக்கூடும். இந்த வாதம் பொருந்தாது. ஒன்றை வேறொன்றாக

வித்ததேபோல், 1951 ஹூ ஜனவரி மீ நமது "சதக விழா" நாவல் பாதாஞ்ஜலி—100-வது நாவல் வெளியாகி உங்களைக் குதுகலத்திலாழ்த்தும். உங்கள் ப்ரதிக்கு உடனே பதிவு செய்யுங்கள்.

நிற்க, கடந்த 5 இதழ்களாகத் தொடர் நாவல் வெளிவராததைப் பெருங்குறையாகக் கருதி பல அன்பர்கள் எழுதியுள்ளதை முன்னிட்டு நாளது ஜனவரி இதழ்முதல் வழக்கம்போல் தொடர் நாவல் வெளியிடுவதென்று தீர்மானித்துள்ளோம். "அமைதியின் அஸ்திவாரம்"—*101*-வது நாவல் ஜனவரி இதழில் ஆரம்பமாகும். அன்பர்களைப் பலவிதத்திலும் ரஸிக்கச் செய்வதே நமது பணி. கீதாசாரியன் அருள்வாராக!

வை. மு. ஸ்ரீ.

க்ரஹிக்கையாகிற ப்ரமம் என்பது தெய்வச் செயலாக நேருமதே யொழியவேறல்ல. அது, மருள் அல்லது மயக்கு என்கிற குற்றத்தின்பாற்படுமேயல்லது பொய் என்கிற குற்றத்தின்பாற்படாது.

பகவத்கீதையில் பத்தாவது அத்யாயத்தில் நான்காவது ச்லோகத்தில் "க்ஷமா ஸத்யம் தம: சம:" என்றவிடத்துஸத்யமின்னதென்பதை நிரூபிக்கும் ஸ்ரீராமாநுஜபாஷ்யமும் அதற்கு வேதாந்த தேசிகருடைய டீகையும் இங்கு நோக்கத்தக்கன. 'உள்ளதை உள்ளபடியே கண்டு சொல்வது ஸத்யம்' என்னுமல், 'தான் கண்டபடியே சொல்வது ஸத்யம்' என்றார் பாஷ்யகாரர். இதன் கருத்தை விவரித்தார் தேசிகர்.

இனி, 'தான்கண்டபடியே சொல்வது ஸத்யம்' என்றதிலும் சிக்ஷிக்கவேண்டியதுண்டு; கண்டது கண்டபடியே சொல்லுவதும் ஸத்யமாகாது; ஏனெனில்; வியாஸஸ்மிருதியில் "ஸத்யம் பூதஹிதம் ப்ரோக்தம்" என்று சொல்லப்பட்டுள்ளது. கண்டது கண்டபடியே சொல்லுவதானது பிராணிகளுக்கு ஹிதமாயிருந்தால் நன்றே; அப்படியல்லாமல் அஹிதமாயிருக்குமானுல் அது ஸத்யமாகாது, அஸத்யமேயாகும்.

"ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம்" என்கிற வசனமும் இங்கு அறியத்தக்கதாகும். பிறர்க்கு வெறுப்பையுண்டாக்கமாட்டாத வார்த்தை எதுவோ அதுவே ஸத்யமென்றும், பிறர்க்கு வெறுப்பை விளைவிக்கும் வார்த்தை உண்மையில் ஸத்யமாயிருந்தாலும் அஸத்யமாகவே கருதப்படுமென்றும் நூற்கொள்கை யுள்ளது. ஒருவன் சொல்லுகிற ஸத்யவசனத்தினுல் பிறர்க்கு அனர்த்தம் விளையுமாயின் அது ஸத்யவசனமாகாது, அஸத்யவசனமாகவே கொள்ளத்தகும் என்பர் பெரியோர்.

இவ்விஷயத்தில் பல சங்கைகள் தோன்றும்; நியாயாலயத்தில் நடக்கும் விவகாரங்களில் உண்மை தெரிவதற்காகச் சில யோக்யர்களான மஹான்களைச் சாக்ஷியிடுவதுண்டே; அவர்கள் உண்மையை யொளிக்காமல் சொல்லித்தானே யாகவேண்டும்; உள்ளதை உள்ளபடி யுரைத்தால் ஒரு தலையில் அனர்த்தம் விளைந்துதானே தீரும்; அப்படி அனர்த்தத்தை விளைவிப்பதான ஸத்யத்தைச் சொல்லலாகாதென்பது நூற்கொள்கையானுல் பிராமாணிகர்களாயுள்ளவர்கள் ஸத்யத்தை மறைத்துத்தீரவேண்டுமே. அது யுக்தமாகுமோ? பிராமாணிகர்களின் செயல் அப்படிக் காணப்படவில்லையே. கொலை, களவு, வஞ்சகம் முதலிய விஷயங்களில் ஸாக்ஷிகளாகக் கோரப்பட்டவர்கள் உண்மையை வெளியிட்டுப் புகழ்பெறுகின்றுர்களே; அவர்கள் உண்மையை யொளித்தால் அஸத்யவாதிகளென்று இகழவும் படுகிறுர்களே; அவர்களின் உண்மையுரையினுல் ஒரு தலையில் தீங்கு விளைந்தாலும் அதைப் பாபமாக ஒருவரும் நினைக்கக்காணுேமே; ஆகவே, பிறர்க்குத் தீங்கு விளைப்பதான ஸத்யவசனம் அஸத்யவசனமே யாகுமென்று எப்படிச் சொல்லக்கூடும்? என்றிப்படிப்பட்ட வாதங்கள் தோன்றக்கூடியவையுண்டு.

இதற்குச் சமாதானம் கேண்மின்; "ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்" என்கிற வசனம் நாம் கற்பித்த

தன்று; உலகம் போற்றும் மஹர்ஷி வசனமிது. 'ஸத்யமாயிருந்தாலும் பிறர்க்குத் தீங்கு விளைக்குமதாயிருந்தால் அது சொல்லலாகாது' என்று சாஸ்த்ரப்ரவர்த்தகர்களான முனிவர்களே யன்றோ நியமித்துள்ளார்கள். அதை அப்ரமாணமென்று சொல்லித் தள்ளுவதற்கில்லை. லோகாநுபவத்தையும் சாஸ்த்ரத்தையும் ஸமரஸப்படுத்துவதென்பது எளிதான காரியமன்று. எல்லா சாஸ்திரங்களுக்கும் எல்லாருமே அதிகாரிகளாக முடியாது. உத்தமாதிகாரிகள் மத்யமாதிகாரிகள் அதமாதிகாரிகள் என்னும்பாகுபாடு எங்குமுண்டு. ஸத்யம் சொல்லிப் பிறர்க்கு அனர்த்தம் விளைப்பவர்களை உத்தமாதிகாரிகளென்று கொள்ள சாஸ்திரம் இடம் தாராது. இங்கு நாம் பலபல இதிஹாஸங்களை யெடுத்துக்காட்ட வேண்டியதாகிறது; ஆனாலும் விரிவுக்குஅஞ்சி ஒரு இதிஹாஸம் மாத்திரமே ஈண்டெடுத்துக் காட்டலாகிறது;—

மஹாபாரதத்தில் அநுசாஸன பருவத்தில் எட்டாவது அத்யாயத்தில் வீதஹவ்ய னென்னும் க்ஷத்ரியனுடைய கதை ஒன்று சொல்லப்பட்டுள்ளது; இவ்வரசன் தன்னுடைய நூறு புதல்வர்களோடு கூடிப் பகைவருடன் போர்புரிகையில் அப்புதல்வர் நூற்றுவரும் மாண்டொழிய, அரசன் (வீதஹவ்யன்) அஞ்சி நடுங்கித் தன்னகரைத் துறந்தோடி ப்ருகுமஹர்ஷியின் ஆச்ரமத்திற் புகுந்து அம்முனிவரை அடைக்கலம்புகுந்து நிற்க, அம்முனிவர் இவ்வரசனுடைய தீனதசையைக் கண்டிரங்கி அபயமளித்து ஆஸனத்திலே அமர்த்தியிருந்தார்; அவனைப் பின்தொடர்ந்தோடிவருகின்ற பகைவன் அவ்வாச்ரமத்திற்கு வந்து அம்முனிவரின் சிஷ்யர்களை நோக்கி 'இங்கு யார் யார் இருக்கிறார்கள்? நான் தெரிந்துகொள்ளவேணும்; ப்ருகு முனிவரையும் நான் காணவேணும்; இங்கு நான் வந்திருப்பதாக அவர்க்குச் சொல்லுங்கள்' என்று சொல்ல, உடனே முனிவர் உள்ளிருந்து வெளியே வந்து அவனை உபசரித்து 'இங்கு உனக்கு ஆகவேண்டியதென்ன?' என்று கேட்க, 'முனிவரே! வீதஹவ்யன் இங்கு வந்து பதுங்கிக் கிடக்கிறான், அவனை வெளியே விடும்; அவனைக் கொன்றுமுடிக்கவேணும்' என்று அப்பகையரசன் கூற, அதற்கு ப்ருகுமுனிவர் விடை கூறுகின்றார்;—[நேஹாஸ்தி க்ஷத்ரிய: கச்சித் ஸர்வே ஹீமே த்விஜாதய:] 'இவ்விடத்தில் க்ஷத்திரியன் ஒருவனுமில்லை; இங்குள்ளார் யாவரும் அந்தணர்களே' என்றார். அதனால் அந்த வீதஹவ்யனுக்கு நேர்ந்த ஆபத்து எளிதாக நீங்கிவிட்டது. க்ஷத்ரியனான வீதஹவ்யன் தம்முடைய ஆச்ரமத்திலிருக்கச்செய்தேயும் 'இங்கு ஒரு க்ஷத்ரியனுமில்லை' என்று முனிவர் சொன்னதானது அஸத்யமென்று நினைக்கக் கூடியதே யொழிய ஸத்யமென்று நினைக்கக்கூடியதன்று. சரணாகதரக்ஷணம் பரமதர்மமென்றும், அஞ்சி நடுங்கி சரணம்புகுந்தவனைக் காட்டிக் கொடுப்பது மஹாபாதகமென்றும் கருதியே முனிவர் அவ்விதமாக விடை கூறினர். 'வீதஹவ்யன் இங்கில்லை' என்று பச்சைப்பசும் பொய்யாகச் சொல்லாமல் "இங்குள்ளார்யாவரும் அந்தணர்களே; அரசன் ஒருவனுமில்லை" என்று சொன்னது முனிவருடைய சாதுரியம். பிறருடைய அனர்த்த பரிஹாரத்திற்காகவும் பச்சைப் பசும் பொய் சொல்லலாகாது என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. சரணாகத ஸம்ரக்ஷணமாகிற மிகச்சிறந்த தருமம் ஸித்திக்க

வேண்டில் பச்சைப்பசும் பொய்யும் பேசலாம் என்று கூறுகின்ற பெரியார்களுமுளர்.

இவ்விஷயத்தை இப்போது இவ்வளவோடு நிறுத்திக் கொள்வோம். உண்மையுரையின் உண்மையை நம்போன்றவர்கள் எளிதாக நிஷ்கர்ஷித்தறியகில்லோம் என்பதே முடிவான வார்த்தை. "தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்" என்று மஹாபாரதத்திலும், "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேயஸ் ஸதாம் தர்ம: ப்லவங்கம!" என்று ஸ்ரீராமாயணத்திலும் கூறியுள்ளபடி தரும நுட்பங்கள் அல்பச்ருதர்களுக்கு அறிவரிதாதலால், இன்னது ஸத்யம், இன்னது அஸத்யம் என்று இலேசாகக்கண்டறிய முடியாதென்பதை யுணர்த்துதற்கே இங்கு இவ்வளவு விரித்துரைக்கப்பட்டது.

இனி ஸ்ரீராமபிரானுடைய ஸத்யவாதித்வத்தைப் பற்றிப் பேசுவோம். ராமனுடைய ஸத்யவாதித்வம் ராமனுடைய திருவாக்கிலிருந்தே வெளிவருகின்றபடியை முந்துற நிரூபிப்போம். **"ராமோ த்விர் நாபிபாஷதே"** என்று ப்ரஸித்தமாக வழங்கும் ச்லோகம் ஸ்ரீராமனுடைய திருவாக்கிலிருந்தே அவதரித்ததாகும். வனவாஸப்புறப்பாட்டுக்கு முன்பு ராமன் கைகேயியிடத்தில் சொல்லுகிற வார்த்தையிது.

"தத் ப்ரூஹி வசநம் தேவி! ராஜ்ஞோ யதபிகாங்க்ஷிதம்,
கரிஷ்யே ப்ரதிஜாநே ச ராமோ த்விர் நாபி பாஷதே"

என்பது பூர்ணச்லோகம். "ஆணையிட்டுச் சொல்லுகிறேன். ராமன் வாக்கில் இரண்டு பேச்சு வாராது; ஒன்றே யுரைப்பானொரு சொல்லே சொல்லுவானென்கிற புகழ் ராமனுக்கே உரியது" என்று இராமனே சொன்னானாயிற்று.

மற்றோரிடத்திலும் இராமன் தன்னைப்பற்றி இங்ஙனே சொல்லிக் கொள்வதைக் காணுநின்றோம்; [கிஷ்கி. 7–22.] ஸுக்ரீவனை நோக்கிக் கூறுகின்ற வார்த்தை —

"அந்ருதம் நோக்தபூர்வம் மே நச வக்ஷ்யே கதாசந,
ஏதத் தே ப்ரதிஜாநாமி ஸத்யேநைவச தே சபே."

என்பது. 'இதுவரையில் நான் பொய் சொன்னதில்லை; இனிமேலும் ஒருகாலும் சொல்லப்போகிறதில்லை; ஸத்யத்தின் மேலாணையிட்டு உறுதியாகச் சொல்லுகிறேனிதை' என்பது இதன்பொருள். இதே வார்த்தையை அந்த ஸுக்ரீவனிடத்திலேயே மறுபடியும் ஒருமுறை சொன்னதுமுண்டு; [கிஷ்கி. 14–14. காண்க.]

இப்படி தன்னுடைய ஸத்யவாதித்வத்தைத் தானே சொல்லிக்கொள்வது தற்புகழ்ச்சி யென்னுங் குற்றத்தின் பாற்படாதோ? "பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன் பொய்யனேனே" என்று ஆழ்வார்கள் அநுஸந்தித்துக்காட்டுகிற வழியன்றோ சிறந்தது; அவ்வழியை விட்டுத் தன்னைத்தானே மெய்யனாகப் புகழ்ந்து பேசிக்கொள்வது குணக்கடலான இராமனுக்குத் தகுதியோ? என்று சிலர் நினைக்கலாம். "தன்னுடையாற்ற லுணராரிடையினும் தன்னைப் புகழ்தலும் தகும்" என்றார் நன்னூலாசிரியர். வடநூற்களிலும் இங்ஙனே அனுமதியளித்த

துண்டு. தனக்குள்ள பெருமையைச் சொல்லித்தீரவேண்டிய ஸமயத்தில் சொல்லித்தானே யாகவேண்டும்.

இனி, ராமனுடைய ஸத்யவாதித்வம் பிறருடைய வாக்கினாலும் வெளிவந்தபடியையும், அந்த ஸத்யவாக்கின் பெருமையினாலாய பயனையும் எடுத்துரைக்க விரும்புகிறோம். அதற்குமுன், தசரதசக்ரவர்த்தியினது ஸத்யவாதித்வத்தைப் பற்றிச் சிறிது ஆராய்ச்சி செய்ய அவசியமாகிறது.

தசரதாத்மஜனான ஸ்ரீராமபிரான் ஸத்யவாக்யனென்பது சொல்லவேணுமோ? தந்தையான தசரத சக்ரவர்த்தி ஸத்யவாதிகளில் தலைவனாக ப்ரஸித்தனாகையால் அவன் வயிற்றிற் பிறந்த இராமன் ஸத்யவாதியென்பதில் வியப்புண்டோ? என்று பலர் சொல்வதுண்டு. இதைப் பற்றி இங்குச் சில சொல்லநினைக்கிறோம்.

தசரதசக்ரவர்த்திக்கு ஸத்யவாதியென்கிற விருது விளைந்தது "புண்யைர் யசோ லப்யதே" என்று ஒரு மஹாகவி சொன்ன கணக்கிலே ஏதோ அவனுடைய பாக்யவிசேஷத்தினாலத்தனை என்றே சொல்லவேண்டும். தசரதனுடைய சரித்திரம் விபுலமாக நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை; கிடைக்கின்ற சரித்திரத்தில் சாஸ்திரப்படி அவனை ஸத்யவாதி யென்று கொள்வதற்கு அவகாசமுண்டா வென்று பார்க்கவேணும்: கைகேயிக்கு அவன் என்றைக்கோ வாக்களித்திருந்த இரண்டு வரங்களை ஸ்ரீராம மகுடாபிஷேக ஸமயத்தில் மறுக்க முடியாமல் ஸ்ரீராமனுடைய வனவாஸத்திற்கு இசைந்திருந்தானென்கிற இவ்வளவே கொண்டு அவ்வரசனுக்கு ஸத்யவாதியென்கிற புகழ் விளைந்துள்ளது. இதன் ஔசித்யத்தைச் சிறிது விமர்சிப்போம்.

கைகேயிக்கு அவன் வரங்கொடுத்திருந்தது எந்த யுகாந்தரத்திலோ தெரியாது. இன்னவிதமான வரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கவுமில்லை. அதுகிடக்க. இவ்வரசன் இராமனைத் தானாக வரவழைத்து 'நாளை உனக்கு மகுடாபிஷேகம்' என்று சொன்னது நாடு நகரமும் நன்கறிந்தது. அதுதானும் ஒருமுறை சொன்னதன்று, இருமுறை சொன்னது. இங்ஙனே சொன்னதைத் தவறினவன் ஸத்யவாதியாக எங்ஙனம் ஆகமுடியும்? கைகேயிக்கு வரங்கொடுத்திருந்ததற்குக் கண்ணழிவு சொல்லிவிட முடியும்; எப்படியென்னில்;

சாஸ்த்ரங்களில் "பஞ்சாந்ருதாநி ஆஹுரபாதகாநி" என்று ஐந்து ஸமயங்களில் பொய் சொல்லலாமென்றும் அதனால் பாதகமில்லை யென்றும் சொல்லப்பட்டுள்ளது. விவாஹகாலம் முதலிய ஐந்து ஸமயங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் "ப்ராணாத்யயே" என்பது மொன்று. உயிர்போகுந்தருணமாயிருந்தால் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பொய் சொல்ல நேர்ந்தால் அது பாதகமன்று—என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது. தசரதன் கைகேயிக்கு இரண்டுவரம் கொடுத்தது சம்பராஸுரயுத்த ஸமயத்தில் உயிர்க்கு அபாயம் விளைவதாயிருந்த காலத்தில்தான் என்பது இதிஹாஸத்தினால் தெரிய வருகின்றது. அந்த வரப்ரதானத்தை அவசியம் நிறைவேற்றியே யாகவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை.

ஏன் நிர்ப்பந்தமில்லை? 'உயிர்போகுந்தருணத்தில் பொய் சொன்னால் பாதகமில்லை' என்கிற சாஸ்த்ரம் ஸாமாந்யசாஸ்த்ரமே

யொழிய விசேஷசாஸ்த்ரமன்றே. அதனைப் பின்பற்றியே யாக வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; ஆகவே கைகேயிக்கு அளித்திருந்த வரத்தின்படி தசரதன் நிறைவேற்றாதிருந்தனனாயின் அது அவனுடைய ஸத்யவாதித்வப் பெருமைக்குப் பெருத்த குறையேயாகுமன்றோ? என்று சிலர் வாதிக்கவுங்கூடும். இங்குத் தெரிந்துகொள்ளவேண்டியவிஷயம் கேண்மின்;

இராமனுக்கு ராஜ்யங் கொடுப்பதாக ஒருமுறைக்கிருமுறை கூறினது மறைக்கமுடியாததாதலால், இதைஅரசன் கைகேயிடம் எடுத்துக்கூறி 'கைகேயீ! உனக்கு நான வெகுகாலத்திற்கு முன்பு பொதுவாக இரண்டுவரம் கொடுத்திருப்பது உண்மையே; இன்னது செய்யவேணுமென்று அப்போது நீ கேட்டிருக்கவில்லை; இப்போது நான் இராமனுக்கு ராஜ்யம் கொடுப்பதாகச் சொல்லியானபடியால் அந்த வாக்குத் தவறமாட்டேன்; அதற்கு விரோதமில்லாதபடி நீ கேட்கும் வரத்தையே நான் கொடுக்கமுடியும்; முடிந்துபோன விஷயத்தை நீ கேட்பது தகுதியன்று' என்று திண்ணமாகச் சொல்லியிருக்கவேண்டும். இப்படிச் சொல்லுவதனால் ஸத்யவாதித்வத்திற்கு யாதொரு பங்கமும் விளையாது.

அன்றியும் மற்றொருவிஷயமும் இங்குக் குறிக்கொள்ளத்தக்கதுண்டு; "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்று வடிவெடுத்த ஸித்ததர்மமாகச் சொல்லப்பட்ட இராமனோடு கூடிவாழ்வதை விட்டு ஆபாஸதர்மமான ஸத்யவசனத்தைத் தசரதன் பற்றி நின்றது அவனுக்கு அவத்யமாகவும் சொல்லப்பட்டுள்ளது. முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்றவிடத்தில் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்தி—"சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்கு உறுப்பு" என்பதாம்; இங்கு மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி வருமாறு:—"முன்பே வரப்ரதானத்தைப் பண்ணிவைத்து இப்போதாக மறுக்கவொண்ணாதென்று ஆபாஸமான ஸத்யதர்மத்தைப் பற்றிநின்று "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்கிற பெருமாளோடே கூடிவாழவிருந்த பேற்றை இழந்த தசரதசக்ரவர்த்தியைப்போலே..." என்று.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ததிபாண்டனென்னும் இடையனுடைய கதை ப்ரஸித்தமானது. தாயெடுத்த சிறு கோலுக்கு உளைந்தோடிவந்த கண்ணபிரானை மறைத்திட்டுவைத்து, அவனைப் பிடித்தடிப்பதற்காகத் தொடர்ந்தேவந்த யசோதை 'என் மகன் இங்கு வந்ததுண்டோ?' என்று கேட்க, 'அவன் இங்கு வரவில்லை, அவனை நானறியேன்' என்று அஸத்யமே சொன்ன ததிபாண்டன் தனது தயிர்த்தாழிக்கு முட்பட மோக்ஷம்பெற்றுப் போனான்; ஸத்யவாதி யென்று பேர்பெற்ற தசரத சக்ரவர்த்தி நரகபர்யாயமான ஸ்வர்க்கத்தையே பெற்றுநின்றான். இதனால், தசரதனுடைய ஸத்யவாதித்வம் எம்பெருமானை யிழப்பதற்குறுப்பானபடியாலே அஸத்யத்தின் பலனையே தந்துநின்றதென்று தெரிந்துகொண்டோம்.

இராமபிரானுடைய ஸத்யசீலம் எப்படிப்பட்ட பெருமையைப் பயந்ததென்பதைப்பற்றி அடுத்த இதழில் விரிய வுரைப்போம்.

(தொடரும்.)

உலகமும் குழந்தையுலகமும்

(ரவீந்திரரின் ஒரு சிறுகதை)

'என் ஐந்து வயதுக் குழந்தை மினிக்குச் சற்று நேரம்கூட வாயை மூடி மௌனமாயிருக்கத் தெரியாது' என்று ஆரம்பமாகிறது ரவீந்திரரின் உலகப்பிரசித்தமான ஒரு சிறுகதை. சிறுகதை யுலகில் இக்கதைக்கு ஒரு விசேஷஸ்தானம் உண்டு. பேரறிஞர் வ. வே. சு. ஐயர் இக்கதையை அழகுவளம் குன்றாது மொழிபெயர்த்திருக்கிறார்.

ஒருநாவலாசிரியர் சொல்வதாக அமைந்திருக்கிறது இக்கதை. குழந்தை மீனுவின் (மினியை மீனுவாக்கியிருக்கிறார் வ. வே. சு. ஐயர் தமிழ்வாசகர்களுக்காக: நாமும் அவரைப் பின்பற்றுவோம்.) ஓயாப்பேச்சு அம்மாவுக்குப் பிடிப்பதில்லை. அடக்குமுறை செலுத்தப் பார்ப்பாள். ஆனால் அப்பாவும் பெண்ணும் குஷியாய்ப் பேசிக்கொண்டேயிருப்பார்கள்.

ஒருநாள் காலையில் நாவலாசிரியர் தமது புதிய நாவலில் பதினேழாவது அத்தியாய சிருஷ்டி செய்துகொண்டிருக்கிறார். மீனுப் பாப்பா மெள்ளவந்து ஆசிரியர் கையைப் பிடித்துக்கொண்டு, 'அப்பா, காக்காயைக் காவல்காரன் காக்கை என்கிறானே! அவன் சுத்த அசடுதானே?' என்கிறாள்.

இதற்குப் பதில் சொல்வதற்குள்ளே வேறொரு கேள்வி; 'மானத்திலே ஒரு ஆனை இருந்துண்டு தும்பிச்சங்கையாலே புஸ் புஸ்னு தண்ணீரைத் துப்பறதாம். அதுதானு மழை அப்பா?'

இதற்குப் பதில் சொல்வதற்குள் மீனு இன்னொரு கேள்வி போடுகிறாள்: 'அப்பா, உனக்கு அம்மா என்னவேணும்?'

நாவலாசிரியரின் உள்ளமோ பதினேழாம் அத்தியாயத்திலே கதாநாயகனாகிய பிரதாபஸிங்கும் கதாநாயகியாகிய காஞ்சனலதாவும் சந்திக்கின்ற கட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. மீனு ஜன்னல் பக்கம் போய் நின்று கூச்சல் போடுகிறாள், 'காபூலி வாலா! காபூலி வாலா!' என்று.

நிஜம்தான். கீழே தெருவில் ஒரு காபூலி (காபூல்காரன்) அழுக்குப் பிடித்த தொளதொளர்த்தியான நிஜாரும் நெட்டைத் தலைப் பாகையுமாய்ப் போய்க்கொண்டிருக்கிறான். அவன் திரும்பிப் பார்த்ததும் குழந்தை மீனு அம்மாவிடம் ஓடியே போய்விடுகிறாள். அந்தக் காபூல் பீமசேனனின் முரட்டுப் பைக்குள்ளே தன்னைப் போல் இரண்டுமூன்று பாப்பாக்களைப் பிடித்துப் போட்டிருக்கிறான் என்பது மீனுப் பாப்பாவின் எண்ணம்.

காபுலி அல்லது காபுலியையும் ஒருவகைப் புலிபோலவே நமது ஸ்திரீகள் குழந்தைகளுக்குக் காட்டிப் பூச்சாண்டி காட்டுவதும் உண்டல்லவா? 'பார், பார்; துஷ்டத்தனம் பண்ணினு அந்தக் காபுலி அந்தப் பீமசேனப் பைக்குள்ள உன்னையும் பிடித்துப் போட்டுக்கொண்டு போய்விடும்' என்றெல்லாம் சொல்லுகின்ற காலம் போய்விட்டதென்று இப்போதுதான் துணிந்து கூற முடியுமா?

காபூலி உள்ளே வந்து சிரித்துக்கொண்டு நிற்கிறான். நாவலாசிரியர் சில சாமான்கள் வாங்குகிறார். குழந்தைக்கும்

பயம்தெளிவிக்க முயல்கிறார். காபுலி, கொடிமுந்திரிப் பழங்களும்வாதாங்கொட்டைகளும் காட்டி அழைத்தும்,பாப்பா அப்பா உடம்போடு ஒட்டிக்கொள்கிறாள்.

இதே குட்டிப் பாப்பா இதே பிரம்மாண்டமான காபுலியுடன் சிரித்து விளையாடி அரட்டையடிக்கும் காலமும் வந்துவிடுகிறது சில தினங்களுக்குள்ளே. பாப்பாவின் பயத்தைப் போக்க இந்தக் காபுலி கண்டுபிடித்த குறுக்குவழியெல்லாம், லஞ்சமும் அரட்டையும் தான்! குட்டிப்பாப்பாவின் குட்டிமேலாக்கை நிறைத்து விடுவான் வாதாங்கொட்டைகளாலும் திராட்சைப் பழங்களாலும். பாப்பா அரட்டையடிப்பதையும் ஆனந்தமாய்க் கேட்டுக்கொண்டே இருப்பான்.

அவன் பாப்பாவுக்குக் கொடுத்த பழவகையறுக்களுக்காகத் தந்தைஅரைரூபாய் கொடுக்க,அதையும் பாப்பாவுக்கே கொடுத்து விடுகிறான்.

இந்தப் பாப்பா—காபுலி நட்பு வளர்ந்து வருகிறது வெகுவேகமாய். 'ஓ காபுலி, காபுலி உன்னோட அந்த பைக்குள்ளே என்ன இருக்கு?' என்று பாப்பாகேட்க, 'ஆனை இருக்கு!' என்கிறான் அந்த மலைநாட்டான். இந்த விகடத்திலே இருவரும் மகிழ்ந்து போகிறார்கள்.

அவன் கேட்கிறான்: 'பாப்பா, பாப்பா! மாமனார் வீட்டுக்கு எப்போ போறாய்?' பாப்பாவும் ஒரு பதில் கேள்வி போடுகிறாள்: 'நீயும் அங்கே போகிறாயா?'

'மாமனார் வீடு போகிறது' அந்த மாதிரி ஆசாமிகளுக்குள்ளே 'ஜெயிலுக்குப் போகிறது' என்பதற்கு ஒரு பரிபாஷை. ஒரு செலவும் இல்லாமல் உண்டி, உடை, உறையுள் என்ற முப்பெருந் தேவையும் பூர்த்தியாகும் இடமல்லவா?

இப்போது 'மாமனார்' என்றதும் போலீஸ்காரனுடைய ஞாபகம் வருகிறது. ஏன், போலீஸ்காரனே தோன்றிவிடுகிறான் காபுலியின் மனக்கண்முன்பு. அந்த உருவெளித்தோற்றம் கண்டதும், "ஆஹா, என் மாமனாரோட எலும்பை முறிச்சுடுவேன்!' என்று கையை ஓங்குகிறான். சிரிசிரியென்று சிரிப்பாள் மீனு. காபுலி-பீமசேனனும் கூடச்சிரிப்பான்.

காபுலியைக் கண்டதும் நாவலாசிரியரின் உள்ளமோ பாய்ந்து சென்று விடுகிறது, மரம்செடிகளற்ற மலைச் சிகரங்களுக்கும் குறுகிய கணவாய்களுக்கும், சரஞ்சரமாய்ச் செல்லும் ஒட்டகங்களுக்கும், விகடத்தலைப்பாகைகளுடன் விநோதத் துப்பாக்கிகளும் ஈட்டிகளும் ஏந்தி நமது சமபூமியை நோக்கி இறங்கிவரும் வியாபாரக் கூட்டங்களுக்கும். அப்போது மீனுவின் அம்மா குறுக்கிடுவாள், 'அந்த மனிதனை நம்பாதே' என்று.

பயந்த பிரகிருதி அவள். ஏதாவது சத்தம் கேட்டால் திருடனோ, குடிகாரனோ, புலியோ, பாம்போ, பூச்சியோ என்றெல்லாம் கனாக் காணத் தொடங்கிவிடுவாள். 'குழந்தைகளைத் திருடுவதில்லையா? அந்தத் தடியனுக்கு இந்தச் சிறு குழந்தையைத் தூக்கிப்போவது அசாத்தியமா?' என்றெல்லாம் கேள்வி போடுவாள். என்றாலும் பாப்பாவும் காபுலியும் தடையின்றிப் பழகியே வருகிறார்கள். எவ்வளவோ ஏற்றத் தாழ்வான நட்பு இடையறாது தொடர்ந்து வருகிறது.

ஆண்டுக்கு ஒருமுறை காபுலி ரஹமத்காபூலுக்குப் போவான். அதற்குமுன் வீடுவீடாகப்போய் வரவேண்டிய பாக்கிகளை வசூல் செய்வான். அத்தனை வேலைகளுக்கிடையிலும் இந்த ஆண்டில் மீனுவை எப்படியாவது பார்த்துப் போவான்.

ஊருக்குப் போகக் குறிப்பிட்டிருந்த சில தினங்களுக்கு முன் ஒருநாள் காலை. நாவலாசிரியர் 'ப்ரூப்'பார்த்துக்கொண்டிருக்கிறார். திடீரென்று தெருவில் ஒரே அமளிகுமளி. ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிப் பார்க்க, காபுலியை இரண்டு போலிஸ்காரர்கள் கட்டியிழுத்துக்கொண்டு போகிறார்கள்.

காபுலியின் உடைமேல் இரத்தமாயிருக்கிறது, இரத்தம் தோய்ந்த கத்தியொன்றை ஒரு போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போகிறான். அயல்வீட்டுக்காரன் கொஞ்சம் பணம் காபுலிக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. அதுவிஷயமாகச் சண்டைமுற்றிக் காபுலி அவனைக் குத்திவிட்டான்.

கைதி ஆவேசமாக வாய்க்கு வந்தபடியெல்லாம் வைது கொண்டே போகிறான். ஒரு பெருங் கூட்டம் பின்னே தொடர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு வருகிறது. மீனுப்பாப்பா வழக்கம்போல் தெருவுக்கு வந்து, 'காபுலி காபுலி' என்று கூப்பிடுகிறாள்.

அவன் அவளைப் பார்த்ததும், 'காபுலி! உன் மாமனார் வீட்டுக்குப் போறயா?' என்று கேட்கிறாள். அந்த நிலைமையிலும் காபுலி சிரித்துக்கொண்டு 'அங்கேதான் போறேன் பாப்பா!' என்கிறான்.

விலங்குபோட்ட கைகளைக் காட்டி, அந்தக் கைகளால் ஒரு போலீஸ்காரனையும் சுட்டிக் காட்டி, 'அந்தக் கிழட்டு மாமனாரை எலும்பு முறிய அடிச்சிருப்பேன்! நம்ம கையைத்தான் கட்டிப் பிட்டாங்களே' என்கிறான்.

குத்தப்பட்டவன் பிழைத்துக்கொண்டதால் பல ஆண்டுச் சிறைவாசமே தண்டனையாக விதிக்கப்படுகிறது. 'சுதந்திர மலைக் காட்டான் எப்படித்தான் அத்தனை வருஷங்கள் சிறையில் கழிக்க முடிகிறதோ!' என்ற நினைப்புமின்றி நாவலாசிரியர் தம்முடைய நவீனஎழுத்துக்களிலும்'ப்ரூப்'களிலும் பொழுதுபோக்கிவருகிறார்.

மீனுப்பாப்பாவும் பழைய சிநேகிதனை மறந்துவிடுகிறாள், புதிய புதிய தோழமைகளிலே. வயது ஆகஆகத் தோழிமார்களின் தோழமைதான்.

வயதுவந்து மீனுவுக்குக் கல்யாண ஏற்பாடுகள் நடக்கின்றன. ஒருநாள் காலை மணப்பந்தலை அலங்கரிக்கவும், சரவிளக்குகளைத் தொங்கவிடவும் அவசர அவசரமான முயற்சிகள். நாவலாசிரியர் கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

உள்ளே ஒருவன் வந்து சலாம் செய்து எதிரே நிற்கிறான். முதலில் அடையாளம் தெரியவில்லை. அந்தப் பழைய தேகக் கட்டும் தோற்றமும்தான் இப்போது இல்லையே!

'ஜெயிலிலிருந்து நேற்றுத்தான் விடுதலை' என்கிறான். பகீரென்கிறது நாவலாசிரியருக்கு. ஒருவனைப் படுகாயப் படுத்தியவன் எதிர்ப்படுகிறானே, அபசகுனமாச்சே திருமணவைபவத்திலே! எழுத்தாளருக்கும் மூடநம்பிக்கை இல்லையா, என்ன!

'வீட்டிலே விசேஷம். இன்னொருநாள்...' என்கிறார் எழுத்தாளர்.

வெளியே போகத் திரும்பியவன் கதவண்டை போனதும் கொஞ்சம் தயங்கி நின்று, 'பாப்பாவைக் கொஞ்சம் பார்க்கப்படாதுங்களா ?' என்கிறான், 'மீனு இன்னும் பாப்பாதான் !' என்று எண்ணம். முன்னெல்லாம் போல, 'காபுலி! காபுலி !' என்று கத்திக்குதித்து ஓடிவருவாள் என்று கனவு.

'இன்றைக்கு வீட்டில் விசேஷம் என்று சொன்னேனே. இன்று ஒருவரையும் பார்க்கமுடியாது' என்கிறார் நாவலாசிரியர். காபுலி ஒரு பொட்டணத்தைக் காட்டி, 'ஐயா, பாப்பாவிடம் கொடுத்தூடறீங்களா ?' என்கிறான். அந்தப் பொட்டணத்திலே முன்போல வாதாங்கொட்டையும் திராட்சைப்பழமும்தான்.

தனக்கும் மீனுப் பாப்பாவைப்போல் ஒரு பெண் காபூலில் இருப்பதாகச் சொல்லுகிறான். தொளதொளர்த்தியான தன் உடைக்குள் கையைவிட்டு ஓர் அழுக்கடைந்த சிறு காகிதத்தை எடுக்கிறான். அதிலே ஒரு சிறிய கையின் அடையாளம்—கையில் மை தடவி, காகிதத்தில் அப்படியே ஒற்றிக்கொண்ட முத்திரை !

அந்தக் கை அடையாளத்தைப் பார்த்ததும் ஆசிரியர் கண்களில் நீர் ததும்புகிறது. குழந்தை மீனுவை வரவழைக்கிறார். எப்படியிருக்கிறாள் அந்தப் பாப்பா இப்போது! முகூர்த்தப் பட்டாடையுடன் கல்யாணப்பெண் தந்தை பக்கம் வந்து தலை குனிந்து நிற்கிறாள்.

காபுலிக்குத் தூக்கிவாரிப்போடுகிறது. என்றாலும் சிரித்துக் கொண்டு, 'பாப்பா, மாமனாராத்துக்குப் போகிறாயா ?' என்று கேட்கிறான். மீனு பதில் சொல்லாமலே தலை குனிந்து நிற்கிறாள்.

மீனு உள்ளே போனதும் காபுலி பெருமூச்சுவிடுகிறான், 'என் பெண்ணும் இப்படித்தானே வளர்ந்துபோயிருப்பாள் ! எட்டு வருஷத்திலே என்னென்ன நடந்திருக்குமோ ஆப்கானிஸ்தான மலைக்காட்டிலே ?

கல்யாண நாதஸ்வரம் மங்களமாக ஒலிக்கிறது. காபுலியின் உள்ளமோ அந்த மலைப்பாறைகளை நினைத்துக்கொண்டிருக்கிறது.

நாவலாசிரியர் தமது மனோபாவத்தால் காபுலியின் மனோபாவத்தைக் கண்டுவிடுகிறார். கல்யாணத் தமாஷாச் செலவைக் குறைத்துக்கொண்டு அந்தப் பணத்திலே காபுலியைக் காபூலுக்கு அனுப்பிவைக்கிறார். தூரதேசத்திலே ஒரு தந்தை தன் அருமை மகளைச் சந்தித்துக் களிப்புற்றிருக்கக்கூடுமே. இந்த நினைப்பு குழந்தை மீனுவின் திருமணத்திற்கு ஒரு புதிய சோபை தருகிறது ஆசிரியர் கண்களிலே.

மானுடப்பண்பு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொது வானதே, மனுஷ்யகுலம் ஒன்றே !—என்ற பாடத்தை எவ்வளவு அழகாய் எடுத்துக் காட்டுகிறது இந்தக் கதை.

தாகுரின் மூலத்தை வங்கமொழியில் படிக்க முடியாதவர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பிலாவது முழுதும் படித்து இன்புற வேண்டும். திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும். ஆங்கிலமும் தெரியாத தமிழர்கள் வ. வே. சு. ஐயரின் 'காபூல்காரன்' என்ற தலைப்பெயருடன் கூடிய மொழிபெயர்ப்பிலாவதுபடிக்கவேண்டும். இது ஒரு புத்தகவடிவில் திருவல்லிக்கேணிப் பேயாழ்வார் கோவில் தெருவிலே சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப் பெற்றது. சிறியவடிவில் பெரிய பொக்கிஷம்!

வணக்கம் என்றால்?

வணக்கம் என்பது சிற்றறிஞனான மனிதன் முற்றறிஞனான கடவுளை உள்ளத்தில் அன்பினால் பணிந்து நிற்றலேயாகும்.

மனிதனுக்கு வணங்கும் உரிமையே உண்டு; எவ்வளவு பெரியவரானாலும் கடவுளுக்குச் சமானமாக முடியாது. அப்படி நினைப்பது அகம்பாவமாகும். சரியான குரு, மாணவனுக்கு "என்னை வணங்காதே; இறைவனை வணங்கு. என் உள்ளத்தில் உள்ள இறைவனே உன் உள்ளத்திலும் இருக்கிறான்" என்றே உபதேசிப்பார். இந்த உண்மையை அறியாமல் மூடமந்திரக்காரர் உலகை ஏமாற்றித் தமக்கே வணக்கந் தேடிக் கடவுளை மறக்கச்செய்தார்கள்.

இஸ்லாம், அருட்பா—இரண்டும் முழு உண்மையைப் பேசின. "உடலை வணங்காதே; உள்ளத்தில் உள்ள பொருளை அன்பு செய்" என்றன. பெரியார்களைக் காணும்போது உள்ளத்தினால் அன்பு துடிக்க "என் அன்பை ஏற்றருள்க" என்று உணர்ந்து நினைத்தாலே போதும். விழுந்து புரண்டு கும்பிடல் பழைய வழக்கம்; அதை விட உள்வணக்கமே வணக்கம். உண்மையான அன்பிருந்தால் வெளிப்பகட்டுகள் தேவையில்லை. இந்த உள்ளன்புவணக்கத்தை உலகிற்குச் சொல்லி, உடலடிமையாகாமல் எல்லாரும் உடையானுக்கே ஆளாகவேண்டும் என்பது கொள்கை.

அருட்பெரியார்

அருட்பெரியார் அடங்கியிருப்பர். அவர்களுடைய காந்த சக்தியே உலகின் உள்ளத்தைக் கவர்கிறது. தேன் மலருக்குத் தேனீக்களும், கனி மரங்களுக்குப் புட்களும், தாமரைக் குளத்திற்கு அன்னமும் வருவது இயற்கை. அதுபோல் பரமஞானிகளை ஆர்வங்கொண்ட ஆன்மாக்கள் அணுகுவதும் இயல்புதான். தியான வாழ்வு, மோனப் புன்னகை, கருணை யுள்ளம், கலங்கா உறுதி, சமநோக்கம், தியாக தீரம்—இவை பெரியார் இயல்பு.

உலகம், அருட்பெரியாரால் இந்தமட்டாவது உருப்படியாயிருக்கிறது. கண்ணன், புத்தன், லௌத்சன், கொபுத்ஸன், சோக்ரதன், கிறிஸ்து, பிரான்ஸி, சங்கரர், இராமானுஜர் மத்வர், சைதன்யர், நானகர், இராமதாஸர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், பரமஹம்ஸர், விவேகானந்தர், தாயுமானார், வள்ளலார் போன்ற அருட்பெரியார் உலகிற்கு ஞானத்தாலும் அருள் வாக்கினாலும் செய்த உதவி அளப்பரிது. ஆனால், உலகம் அவர்களைப் படுத்திய பாடும் பயங்கரமானது. உதவி செய்த நல்லாருக்குச் சிலுவையும், கல்லெறியும், உதையும், வசவும், சிறையுந் தந்தது உலகம்.

பொறுமைப் புன்னகையுடன் துரோகிகளுக்கும் அன்பு செய்த மகான்களின் பெருமையே பெருமை! முரட்டுத் தனமாகக் கிள்ளும் குழந்தையையும் முத்தமிட்டுப் பாலூட்டும் தாய்போல, கருணை வள்ளல்களான அருட்பெரியார், காட்டுமிராண்டி யுலகம் வைது திட்டி அடித்துப் புண்படுத்தியதெல்லாம் பொறுத்துக் கொண்டு இறைவன் கட்டளையை நிறைவேற்றினர். ஏனெனில் அவர்கள் இறைவன் ஆதேசத்தைப் பெற்றே பேசி, அவனுக்கே

பணிந்து, அவன் இச்சை உலகில் நிறைவேறவே செயல்புரிந்து, அவனுக்கே ஆளாக வாழ்ந்து சென்றனர். அவர்கள் பண்டிதப் புலமையால் பேசவில்லை; அருட்புலமையால், கடவுளுணர்ச்சியால் பேசினர்.

அவர்கள் விளம்பரத்தைவிரும்பவில்லை; மோனத்தனியடக்கத்தையே விரும்பினர். அவர்கள் தமக்காகப் பொருளை விரும்பவில்லை; உலக நலத்திற்காக, ஆண்டவன் கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே பொருளை விரும்பினர். பரமஹம்ஸர் பெயராலும், காந்தியடிகள் பெயராலும் சேரும் பொருட்குவைகள் உலகிற்கு எவ்வளவு நன்மைகளைச் செய்கின்றன!

மஹான்களிற் சிலர் பரம துரிய நிலையில் இருந்து, மிகமிக அடக்கமாக, பெயர் வடிவங்களே தெரியாமல் ஆத்ம சேதனத்தையே தியானத்தால் பரப்பி உலகிற்குப் புதிய உணர்ச்சியும் தருகிறார்கள். சிலர், இதயக்குகையில் இருந்தபடியிருந்து உள்ளெழுச்சியால் வரும்பொன்னுரைகளை எழுதித் தந்து செல்கிறார்கள். சிலர் எழுதாமலே தக்க பாத்திரங்களில் தங்கள் அமுத மொழிகளைப்பெய்து செல்கிறார்கள். சிலர் சொல்லுடன் நிற்காமல் கர்மவீரர்களாகிச் செயல் புரிந்து பல பொது நலங்களைத் தூண்டுகிறார்கள்.

இப்படி யோகத்தில் இறைவனைக் கலந்து உலகிற்கு அடக்கமாக அரிய உதவி செய்யும் பெரியார்களைமதித்துப் போற்றிப் பின்பற்றி நன்றியுடன் துணைநின்று உதவினால் மனித வாழ்வு நல்ல மாறுதலும் பேரின்பச் சுவையும் பெறும். அருட் பெரியாரை வணங்குதல் ஆண்டவனையே வணங்குதலாகும். அவர் பணி செய்தல் இறைவன் பணி செய்தலாகும். இறைவன் அருள் மின்சார நிலையங்களே பரம யோகிகள் ஆவார்கள். சித்த சுத்தியுடன் அவர்களைச் சார்ந்த அன்பருக்கும் அந்த அருள் மின்சார சக்தி உண்டாகும்.

ஆனால், பாத்திரம் அசுத்தமாக, பொய், அகம்பாவப் பொருமைக் களிம்பேறியிருந்தால், அருளமுதம் அதில் ஒரு நாளும் பொழியாது. உன்னை நீ முதலில் சுத்தம் செய்துகொள். அன்பும், ஆர்வமும், சுயநலமற்ற சேவையும் இருந்தால் படிப்படியாக அந்தக்கரண சுத்தி உண்டாகும். பாத்திரம் அப்பழுக்கற்ற தூய்மையும் வாய்மையும் அடைந்த பிறகுதான் பரமகிருபை அதில் இறங்கும். காயாயிருக்கு மட்டும் புளிப்புத்தான்—காய் முதிர்ந்து பக்குவமாக ஆக இனிப்பேறும். இந்த இயற்கை யுண்மையை அறி.

பெரியார்களை நம்பு, அன்பு செய், அத்தனைக்கத்தனை பலன் உண்டு. இதனாலேதான் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் குரு சேவை அவ்வளவு முதன்மை வகிக்கிறது. சுத்தசக்தி ஓம் பரஞ்ஜோதி ஓம்.

உள்ளன்பு

உலகில் மிகவும் அருமையான பொருள் உள்ளன்பு தான். நெருப்புப்புயல் வீசியபோதும், உனக்குத் துணையாக நிற்கும் கலங்கா நண்பன் யார்—அவனே உயிர்த்துணைவன். இங்கே ஒன்று சொல்வது; பின்னால் நேர் எதிரிடையாகச் சூழ்ச்சி செய்

வது; இங்கே "ஆஹா; நான் எல்லாம் செய்கிறேன் என்பது; அங்கிருந்து வசையம்பு தொடுப்பது, இருமனப் பெண்டிர் வேலை செய்வது, கூட்டைக்கலைப்பது, போட்டி நடத்துவது, பொருமை கொண்டு தாக்குவது, மொட்டைக் கடிதம் எழுதுவது, கூட்டம் போட்டுத் திட்டுவது, பத்திரிகைகளில் வம்பிழுத்து ரகளை செய்வது—இவைகளெல்லாம் மனிதனைப்பிடித்த விரியத்தினவின் அழுகல் வேலைகள். இவற்ருல் மனத்திட்ப முள்ளவர் கலங்கார்.

உலகில் மகான்களுக்கெல்லாம் அயோக்கிய சிகாமணிகளின் இன்னல்கள் வந்தன, வருகின்றன, வரும். மகான்கள் புன்னகைப் பொறுமையுடன் தம் இடம் அறிந்து நின்ருல் புல்லர் புயல் வீச்சுகள் ஒன்றும் செய்ய முடியாது.

உள்ளன்பு மட்டும் உறுதியாயிருந்தால் இந்தப்புயலே ஒருவர் மனத்தில் கிளம்பாது; ஆத்திரப்படபடப்பு வராது. அமைதியாக ஆழ்ந்த நினைவுடன் கருணையுடன், கருத்தறிந்து பழகும் நேர்மையான அன்பனுக்கு என் உள்ளன்பு என்றும் உண்டு.

என் முன்னேபின்னே வரும் நண்பருடைய அந்தக்கரண நாடியை முதலில் பிடித்துப்பார்ப்பேன். பிறகுதான் அளவளாவுவோம்.

உதட்டுநேசம் உதவாக்கரை ; உள்ளான்மநேயமே உண்மைநேயம்

பொறுத்திரு !

கவனமாய் இரு ; எவர் கருமத்தையும் ஏற்காதே ; அவரவர் வினையே விளைகிறது. ஒருபைசா வீணுக்காதே. உன் உணவுடைத் தேவைக்குப் போதுமான பணம் சேர் ; உன் பணத்தை இறைவன் காணிக்கையாகக் கருது.

மனிதன் கிஞ்சிக்ஞன்; சர்வக்ஞனை இறைவனையே அவன் சரண்புகுந்திருக்கவேண்டும். அவனுடையஏகாம்சத்திஞல் எல்லா உலகங்களும் நடக்கின்றன என்ருல் மனிதன் செய்யும் அற்பத்தன்மையை என்னென்போம்! தன்னை இறைவன் திருவருளுக்குத் தூய பாத்திரமாக்கி, அவனை நினைத்து, தானுக வந்த ஸத் கருமங்களைச் செய்துகொண்டு மற்றெல்லாவற்றிற்கும் சாட்சியாயிரு—அதுதான் அமைதி வழி.

உலகம் என்ருல் கலகமும் இருக்கும். ஒரு வீட்டில் கொசுவும் முகட்டுப்பூச்சியும் பொறுக்கமுடியாமல் பிடுங்கினுலும் வீட்டைவிட்டுப் போகாமல் எப்படியோ சகித்துக்கொண்டு இருப்பது போலவே உலகிலும் இருக்கவேண்டியதுதான். சித்தம் மட்டும் உலகப் பீடைகளில் ஒட்டாமல் தனித்திருக்கவேண்டும். மோகப்பற்றும் மேகப்பற்றும் ஒன்றே. அது இதற்கு அப்பன்.

உலகம் அசுரக்காடாயிருக்கிறது. அதில் தெய்வ விளக்கை ஒரு புயல் மோதுகிறது. ஆயிரம் இடர்கள் சுற்றிலும் பல்லைக் கடித்துச் சினக்கின்றன. என்ருலும் ஞானி சாந்தமாகப் பிராரப்த கர்மத்தை முடித்துக் கூட்டை உடைத்துச்செல்லுகிருன். ஞானச் சிறகை யாரும் வெட்டமுடியாது ; சத்தியத்தைக் கொல்ல முடியாது ; "ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம !"

திருவருள் படிப்படியாக விருப்பங்களை நிறைவேற்றும். வைத்தவிடத்தில் வைத்தபடியிரு—பொறுமையாயிரு. அன்பு.

ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி

“வாவா, கலா! நீ முன்போல் வருவதேயில்லை. அடிக்கடி வெளியூர் போய்விடுகிறாயே?...கமலா, பார்வதம்கூட இன்று வருவதாகச் சொன்னார்கள்..அதோ வந்தேவிட்டார்களே!..வாருங்கள்.” என்றாள் சாவித்திரிமாமி.

“மாமி! இப்பொழுதெல்லாம் நான்குநாள் ஒருவாரம் போவதுடன் இருக்கிறேன். இனிமேல் நிரந்தரமாக வெளியூர் போகவேண்டி வந்துவிட்டது. என கணவருக்கு தெலுங்குஜில்லாவில் மாற்றலாகிவிட்டது. மறுபடியும் இந்த ஊருக்கு மாற்றுவதும் சந்தேகம். உங்களெல்லோரையும் பிரியணுமேயென்று வருத்தம். குழந்தைகள் படிப்பு வேறு இரண்டுங் கெட்டானாய் விடுகிறது.”

“அப்படியா, கலா! நீ ஊருக்குப்போவது எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எல்லோரும் அடிக்கடி சந்திப்பதும், பேசுவதும் என்ன நன்றாக பொழுது கழிந்ததும். உன் கணவர் மட்டும் போகட்டுமே. நீ குழந்தைகள் படிப்பை முடித்துகொண்டு போ. அல்லது குழந்தைகளைப் படிக்கவைத்துக்கொண்டு இங்கேயே இருந்துவிடேன்” என்றாள் பார்வதம்.

“அதெப்படி சாத்தியம்? இந்த பரீக்ஷை முடியும்வரை இருக்கலாம். பிறகு அவரைச் சாப்பாட்டுக்குத் திண்டாடவிட்டு நான் இங்கிருப்பது உசிதமல்ல. நம் பெரியோர்கள் குடும்பம் ஐக்கியமாக நடத்த அல்லவா நம்மைப் பழக்கப்படுத்தியிருக்கிறார்கள்!... மேல் நாட்டில் குழந்தைகள் ஓரிடம். மனைவி ஒரு ஊர். கணவன் ஒரு ஊர். அப்படியெல்லாம் வாழ்க்கை நடத்துவார்கள். அவர்கள் சமுதாய பழக்கம் அப்படி. ஏன் நம் நாட்டில்கூட, மலையாளத்து கிறிஸ்துவர்கள் சிலர் அம்மாதிரி நடக்கிறார்கள். நம் பழக்க வழக்கம் அப்படி அல்லவே!”

“எனக்குக்கூட மலையாளத்துக் காரர்களைப்போல் கணவன், மனைவி இருவரும் உத்தியோகம் வகிப்பது பிடித்திருக்கிறது. ஒருகாசு வேணுமென்றால் புருஷன் கையை எதிர்பார்க்கும் அவலப் பிழைப்பு நன்றாயில்லை.”

“நீ சொல்வதைப்பூராவும் ஒத்துக்கொள்ளமுடியாது, கமலா! பெண்களுக்கு கல்வி அறிவு இன்றியமையாதது, உலகஞானம் விஷய ஞான ் எல்லாம் பூரணமாக இருக்கவேண்டியதே. கூடுமானால் டைட அடிக்கவோ, உபாத்தியாயினி, சங்கீதம், தையல் இபபடி ஏதோ ஒரு தொழில் தெரிந்திருப்பதும் அவசியம். ஆனால் உத்தியோகம் ் ல்லாம் பெண்களும் பார்ப்பது புவசியமில்லை. சம்பாதிக்கமுடியாத க னவனாக இருந்தால் பெண்கள் உத்தியோகம் செய்யலாம். ஆனால் பெண் ளின் மகத்தான பொறுப்பு வீட்டில்தானிருக்கிறது. புருஷன் சம்பாதித்துவிடலாம். அதனால் மட்டும் பொருள் அவனுடையதாகாது. அதை சரியாக செலவுசெய்து மக்களை நல்ல முறையில் வளர்த்து கணவனையும்போஷிக்கும் செயல் இவளுடையதே பொருளுக்கு இருவருமே பாத்தியப்பட்டவர்கள். ஐநூறு

ரூபாய் சம்பாதிக்கும் கணவனுடையமனைவி தானும் 200 ரூ.சம்பாதிக்கப் புறப்பட்டு குழந்தைகளுக்கு 150 ரூபாயில் ஆயாக்கள் வைப்பது சரியா?...கணவனுடைய ஆதரவற்ற பெண்கள் உத்தியோகம் செய்யட்டும், ஆதரவுள்ளவர்களுக்கு அநாவசியமே."

"அப்படியானால் அரையணுவுக்கு விஷம் வாங்கிச் சாப்பிடக் கூட கணவன் முகத்தைப் பார்த்து கெஞ்சணுமென்கிறாயா?"

"என்ன பர்வதம்! விஷம் வாங்கி சாப்பிடுவானேன்? அமிருதமே வாங்கிச்சாப்பிடேன்! பெண்களுக்குத் தனியாகப் பணம் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. தாய் தந்தையர் அவர்களால் இயன்றவரை கல்விபுகட்டி,கல்யாணச் செலவைக் குறைத்துப் பெண்களுக்குச் சொத்து வைக்கட்டும்."

"ஆமாம்! எவ்வளவோ வருஷங்களாக பெண்களுக்கும் சொத்துரிமை வேணுமென்று சட்டமெல்லாம் கொண்டுவந்தார்கள். ஒன்றும் உருப்படியாக ஆகவில்லையே!"

"ஒரு சட்டம் இயற்றுவது சுலபமா? அதில் எவ்வளவோ சிக்கல்கள் வருகின்றன. சட்ட நிபுணர்கள் அலசி ஆராய்ந்து, பிறகு, பெண்களுக்கு சொத்துரிமை வந்துதான் தீரும். ஆனால் அதில் இயற்கையாக இருக்கும் சில நன்மைகள் தீமைகள்விலகும்."

"பெண்கள் கையில் பணம் வந்துவிட்டால் கேட்பானேன்! அவ்வளவும் புடைவ வாங்கி, அல்லது, யாரிடமாவதுகொடுத்து ஏமாந்துபோய் மூன்றேநாளில் போய்விடும்."

"அப்படிச் சொல்லாதே பர்வதம்! எதற்கும் அனுபவம் வேணும். அவர்கள் கையில் காசைக் கொடுத்து பொறுப்பை உணர்த்தவேணும். படிப்பும் இருந்தால் சொத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்ள சிறிது காலத்தில் அறிந்துகொள்கிறார்கள்."

"என்னதான் சொல்லு, பெண்களால் பொருளைக் காப்பாற்ற முடியாது. தயவுள்ள மனம்;யாரிடமாவது கொடுத்துவிடுவார்கள்."

"கருணையுள்ளம் படைத்தவள் பெண் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். காப்பாற்றும் ஆற்றலுக்கும் குறைவில்லை. சில பெண்கள் எவ்வளவோ சிக்கனமாகச் செய்வார்கள். ஆண்கள் சிலர் வருமானத்தை உள்ளபடி பெண்களுக்குச் சொல்வதில்லை. சிலர் வீண்டம்பம் செய்கிறார்கள். சிலர் உள்ளதையும் இல்லையெனச் சொல்லி அழுகிறார்கள். இவைகள் சரியல்ல. 'என்னுடைய வருமானம் இது; பொறுப்பு இருவருக்கும் உள்ளது. எப்படியோ நடத்து.' என்று சொல்லட்டும். அந்தப் பெண்கள் பொறுப்பை உணரப் பழகிவிடுவார்கள்."

"பெண்கள் ராஜ்யபாரம் செய்யவில்லையா? தெரியாதென்று மட்டம்தட்டினால் தெரியாமல் போய்விடுகிறது. ஆதிகாலத்தில் பெண்கள் தெய்வமாகக் கருதப்பட்டார்கள்; குடும்பத்தில் கௌரவஸ்தானம் இருந்தது. பிறகு வரவர அந்த நிலை மாறிவிட்டது."

"எதற்கும் எல்லையும சுதர்மமும் முக்கியம். ஆண்கள் சம்பாதிப்பதில் பூரண உரிமை பெண்களுக்குண்டு. கணவனது ஆதரவு பெற்ற பெண்மணி குடும்பத்தை ஆதரவாக நடத்தவேண்டியது அவளுடைய சுதர்மம். அதைவிட்டு உத்தியோகம் பார்க்கப் போவது தன்னுடைய தரத்தைக் குறைத்துக் கொள்வதே! உண்மையில் அவசியமிருப்பின் உத்தியோகம்செய்வது அவச்யமே."

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

லேடி வில்லிங்டன் ஸ்கூல் திறப்பு விழா

19-12-1922

"கவர்மெண்ட் ஸெகண்டரி டிரெயினிங் ஸ்கூல்" என்னும் பெயருடன், தெளிசிங்கப்பெருமாள் கோவில் தெருவில் "ராஜா ராம ராவ்" அவர்கள் வீட்டில் (வாடகைவீடு) 10 வருஷங்களாக நடந்துவந்த பாடசாலைக்கு அந்த வீடு இடம் போதாமையால் ஐஸ்ஹௌஸுக்குப் பக்கத்திலேயே கவர்மெண்ட் செலவில், ஒரு லக்ஷத்து எழுபத்தேழாயிரம் ரூபாய்க்கு ஒரு கட்டிடம் கட்டி முடிந்து, அது டிஸம்பர் 19-ஆந் தேதி, சென்னை ராஜதானி கவர்னராக அந்த சமயம் இருந்த வெல்லிங்டன் பிரபுவின் மனைவி லேடி வில்லிங்டன் அவர்களால்திறந்துவைக்கப்பட்டது. கவர்னர் தம்பதிகள் இருவரும் வந்து மிகவும் விமரிசையுடன் திறப்பு விழாவை நடத்திவைத்தனர். கல்விமந்திரி கனம் A. P. Patro அவர்களும் P. W. D. இஞ்ஜினியர் மிஸ்டர்ஹட்டன் (Mr. Hutton) அவர்களும் பேசினார்கள். கட்டிட வேலையை மேற்கொண்ட கண்டிராக்டர் ஸ்ரீமான் P. விஜயராகவலு செட்டியார் அவர்கள் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தார். அதிசீக்கிரத்திலேயே, எல். டி. வகுப்பும் ஆரம்பித்து "லேடி வில்லிங்டன் ட்ரெய்னிங் காலேஜ்" என்று வழங்கி வருகிறது.

மறுநாள் 20-ஆந்தேதி பாடசாலை கிறிஸ்துமஸுக்காக மூடப்பட்டு ஜனவரி 3-ஆந்தேதி திறக்கப்பட்டது.

1922-ஆம் வருஷம் கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு என் சகோதரி பாலமும் அவள் குழந்தைகளும் வந்து 15 நாட்கள் இருந்துவிட்டுப் போனார்கள். என் சிறிய தாயார் பெண் செல்லமும் அவள் கணவர் S. P. வைத்தியநாதய்யரும் அந்த வருஷம் கயாவில் நடந்த காங்கிரஸ் கூட்டத்துக்குப் போய்விட்டு வந்தனர்.

1923

ஜனவரி 8-ஆந்தேதிபாடசாலைத்தலைவி மிஸ் ரயன் என்பவர் என்னிடம் பாடசாலைத் தலைமையை ஒப்பித்துவிட்டு, ஓய்வெடுத்துக்கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பிப்போனார். 27-ஆந்தேதி (Miss Gerrard) மிஸ் ஜரார்டு என்பவர் வந்து காலேஜ் Principal ஆக வேலை ஒப்புக்கொண்டு அன்றுமுதல் 1946-ஆவது வருஷக் கடைசிவரைக்கும், 23 வருஷ காலம், மிகவும் திறமையுடன் காலேஜ் வேலையை வகித்துச் செய்தார்.

1923-ஆம்வருஷம்,ஜனவரி20-ஆந்தேதிஸ்ரீசாரதாஐக்கிய சங்கத்தின் 11-ஆவது வருஷக் கொண்டாட்டம். ஸல்லா குருசாமி செட்டியாரின் தர்மபத்தினியாரின் தலைமையில் மிக விமரிசையாக நடந்தது.

பிப்ரவரி மாதம் 22-ஆந்தேதி சர்வகலாசாலை பட்டமளிப்பு Supplementary Convocation விழா ஸெனட் மண்டபத்தில்

நடந்தது. ஆசிரமத்தின் முதல்மாணவி அம்முக்குட்டி யென்பவள் அன்று B. A. பட்டம் பெற்றாள். எங்களுக்கெல்லாம் இது எத்தனையோ பெருமையாயிருந்தது. ஆகவே 23-ஆந்தேதி, ஆரசமத்துப் பழைய மாணவிகள், அந்த சமயம் படித்துக் கொண்டிருந்த மாணவிகள், எல்லாரும் சேர்ந்து வெளிப்பேர் சிலரையும் அழைத்து, அம்முக்குட்டிக்காக ஒரு "ஸோஷல்" வைத்து அவளைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

இந்த மாதக்கடைசியில் பாடசாலையில் "பழைய மாணவிகள் சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. அது முதல் பிரதி வருஷமும், "பழைய மாணவிகள் தினம்" ஒன்றுநடக்கும். பழையமாணவிகள் யாவரும் வந்து, தாங்கள் படித்த பாடசாலை என்னும் அபிமானத் துடன் தேநீர் அருந்தி, ஒரு கதம்பக் கொண்டாட்டம் நடத்தி அந்த தினத்தைக் கொண்டாடுவது வழக்கம்.

மார்ச்சு மாதம் S. S. L. C. பரீக்ஷை. ஆச்ரமத்திலிருந்து பரீக்ஷைக்குப் போனவர்கள் 6 பேர். V. கல்யாணி, S. காந்தம், C. R. சுப்பலக்ஷ்மி (பாப்பு), S. பாலம், C. சுப்பலக்ஷ்மி. B. பவானி என்பவர்கள். V. கலியாணி என்பவள் L. M, S. முடித்து கவர் மெண்ட் ஆஸ்பத்திரி டாக்டராக இருக்கிறாள். S. காந்தம் B. A. L. T. முடித்துவிட்டு கல்வியிலாகாவில் வேலையாயிருக்கிறாள். C. R. பாப்பு, B. A. முடித்துவிட்டு, தன் சொந்தத்திலேயே ஒரு வரை புனர்விவாகம் செய்துகொண்டு கணவனுடனும் குழந்தை களுடனும் சந்தோஷமாயிருக்கிறாள். S. பாலம் என்பவள் ஆச்ர மத்தின் முதல்மாணவியான அம்முக்குட்டியின் ஒரே அருமை யான பெண். அவள் B. A. L. T. முடித்து விவாகம் செய்து கொண்டு சியாமலா என்னும் ஒரு குழந்தை பிறந்த சிலவருஷங் களில் கணவனை யிழந்து கவர்மெண்ட் உத்யோகத்தை சிலவரு ஷங்களுக்குப்பிறகு உதறித்தள்ளிவிட்டு ஈரோடில் "கலைமகள் கல்வி நிலைய"த்தைஸ்தாபிப்பதில் பங்கெடுத்துக்கொண்டு திறமை யுடன் நடத்தினாள். ஆனால், 5 வருஷங்களுக்குப்பிறகு பரமனடி சேர்ந்தது கடவுள் சித்தம்.

C. சுப்பலக்ஷ்மி என்பவள் B. A. L T. முடித்து ஆந்திர ஜில்லாக்களில் கவர்மெண்ட் பாடசாலை யொன்றில் வேலையா யிருந்தாள். அவள் தகப்பனார் ஸர். வி. ராமேசத்தின் கிட்டின பந்து. ஸப்ஜட்ஜாயிருந்தார். அவர் திடீரென்று காலமான வுடன், தாயில்லாத பெண்ணாகிய சுப்பலக்ஷ்மி அருமையான தகப் பனாரையிழந்த வருத்தம் தாங்கமுடியாமல் கவர்மெண்ட் வேலையை ராஜினாமா செய்துவிட்டாள். பிறகு அவளை என்னிடம் அழைத்துக்கொண்டு, சமாதானப்படுத்தி, சாரதாவித்யால யத்தில் அவளுக்கு வேலை கொடுத்தேன். 1930-ஆவது வருடமுதல் தற்சமயம் மாம்பலத்திலுள்ள சாரதா வித்யாலயம் ஹை ஸ்கூல் தலைமை உபாத்தினியாக மிகத்திறமையுடன் வேலைசெய்து வருகிறாள். 20 வருஷங்களாக சாரதா வித்யாலயத்தின் முன் னேற்றத்துக்காக உழைத்துவருவது போற்றத்தகுந்த விஷய மாகும். B. பவானி என்பவள் டாக்டர் கேசவபாய்க்குக் கிட்டின பந்து. 10 வயதிலேயே புருஷனையிழந்த பிறகு டாக்டர் கேசவ பாய் அவர்மனைவி இவர்களுடைய முயற்சியில் ஆச்ரமத்தில் வந்துசேர்ந்து படித்தாள். இவளைப் பார்த்தால் தன் துக்கம்

அதிகமாகும் என்றும், அதனால் இவளைப் பார்க்காமலே இருந்து விடுவது என்றும் இவள்தாயார் இவளை நீண்ட கோடை விடுமுறைகளுக்குக்கூட அழைத்துப்போவதில்லை. ஹாஸ்டலிலேயே விடுமுறைக் காலங்களில்கூட இருப்பது மாணவர்களுக்கு எத்தனை அலுப்பாயிருக்குமென்பதையும் பெற்றோர் கூடப்பிறந்தவர்களையெல்லாம் பார்க்கவேண்டுமென்று அந்த சிறுவயதுப் பெண், உலகம் தெரியாத பெண்ணுக்கு எத்தனை ஆர்வம் இருக்குமென்பதையும் ஒரே இடத்தில் ஏழெட்டு வருஷங்கள் இருந்தால் அதனால் எத்தனை வெறுப்பும் அலுப்பும் ஏற்படும் என்பதையும் அவள் பெற்றோர்கள் உணரவேயில்லை. டாக்டர் கேசவபாயும் அவர்மனைவியும் என் வற்புறுத்தலின்பேரில் தங்களிடம் 1 வாரம் அல்லது 10 நாட்கள் கோடை லீவுகளில் அழைத்து வைத்துக்கொள்வார்கள். எப்படியோ, S. S. L. C. முடித்து, ஸெகண்டரி டிரெயினிங்கை முடித்துவிட்டு, மங்களூருக்கு அருகிலேயே அவர்கள் ஊராகிய கார்கலாவில் வேலைக்குப்போய் அந்தப் பக்கங்களிலேயேயிருக்கிறாள். அவள் உத்தியோகம் செய்வது அவள் பெற்றோர்களுக்குக் காலக்கிரமத்தில் திருப்தியாயிற்று.

மிஸஸ் டிரைஸ்டேல் Mrs. Drysdale வேலையிலிருந்து விலகியது.

பிராம்மணர் பிராம்மணர் அல்லாதார் கிளர்ச்சி இந்த வருஷத்தில் அதிகம். ஜஸ்டிஸ் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள் அவர்களது "Justice" என்னும் பத்திரிகையிலும், இன்னும் பலவிதத்திலும் மிஸஸ் டிரைஸ்டேலைத் தாக்க ஆரம்பித்தனர். அவர் பிராம்மணப் பெண்களுக்கே உதவிசெய்வதாயும், பிராம்மண உபாத்தினிகளையே நியமிப்பதாயும், இந்திய க்றிஸ்தவர்களையும், பிராம்மணர் அல்லதாரையும் ஆதரிப்பதில்லை யென்றும், நான் அவளுடைய முக்கிய மந்திரியென்றும், நான் சொன்னபடி அவர் கேட்பதாயும், இப்படியெல்லாம் கண்டபடி பேச ஆரம்பித்தனர். இந்தக் கிளர்ச்சி 1920-ஆவது வருஷத்திலேயே ஆரம்பித்தது. அந்தக் காலத்தில் ஆச்ரமத்துக்கு "கவர்மெண்ட் பிராம்மண விதவைகள் ஹோம்" என்று பெயர். 1920-ஆவது வருஷத்தில் சென்னை சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பிரதிநிதியாயிருந்த ஸ்ரீமான் M. C. ராஜா அவர்கள் இந்தக் கிளர்ச்சியை ஆரம்பம் செய்தார். கவர்மெண்ட் பொதுப்பணத்தைப் பொதுவாக எல்லா வகுப்புப் பெண்களின் கல்விக்குப் பயன்படுத்தாமல், பிராம்மணப் பெண்களுக்குமாத்திரம் உபயோகிப்பது தவறு என்றும், கிறிஸ்தவப் பெண்களுக்கும் ஹிந்துப்பெண்களுக்கும் ஜனநெருக்கமான, சுகாதாரக் குறைவான இடங்களில் ஹாஸ்டல் இருக்கும்போது, பிராம்மணப்பெண்களுக்கு மாத்திரம் அதிலும் விதவைப் பெண்களுக்கு, பெரிய அரண்மனையாகிய ஐஸ்ஹௌஸ் வாஸம் எதற்கு என்றும், விக்டோரியா ஹாஸ்டல், மேரிராணிகாலேஜ் ஹாஸ்டல் இவற்றைப்போல ஐஸ்ஹௌஸ்-ம் எல்லா ஜாதி மதத்தினருக்கும் பொதுவான ஒரு ஹாஸ்டலாயிருக்கவேண்டுமென்றும்வாதித்தனர். ஒரு மகம்மதிய மெம்பர், பேசியபோது, அவர்களுடைய சட்டங்களையும் வழக்க பழக்கங்களையும் ஹிந்துக்கள் பின்பற்றினால் ஹிந்துக்களில் விதவைகளின் எண்ணிக்கை குறையும் என்று சொன்னார். இந்தக் கிளர்ச்சி நீடித்துக்கொண்டே வந்தது.

"உலகத்தில்லாத ரகஸியம் உனக்கும் அந்தம்மாளுக்கும் மட்டும் என்ன இருக்கிறது? சுமார் அரைமணிநேரம் நின்ற இடத்தைவிட்டு அசையாமல் நடுத் தெருவில் பேசுகிறீர்களே! அதை பகிரங்கமாய் உள்ளே வந்து நன்றாகப் பேசுவது தானே? யார் அந்தம்மாள்?" என்று ஸரஸ்வதியை அவள் கணவன் அச்சுதன் கேட்டான்.

கேட்ட கேள்விக்குச் சடக்கென்று பதில் சொல்லமுடியாமல் அசட்டுச்சிரிப்புடனும் ஒருவிதமான அங்கசேஷ்டையுடன் கூடிய முகக் கோணலுடனும், "ஒன்றுமில்லை... இதோ வந்து விட்டேன். காப்பி கொண்டுவருகிறேன்" என்று கூறியவாறு உள்ளே ஓடினாள்.

அச்சுதன் தன் சட்டைகளைக் கழட்டிவிட்டு கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு வந்து 'அப்பாடா' என்று ஈஸிச்சேரில் உட்கார்ந்தான். ஸரஸ்வதி முகத்தில் சரியானபடி தென்பானகளையின்றி அசடுவழிய காப்பியையும் பலகாரத்தையும் கொண்டுவந்து வழக்கப்படி கொடுத்துவிட்டு அங்கு நிற்காமல் உள்ளே ஓடிவிட்டாள்.

எத்தகையவர்களுக்கும் சந்தேகம் என்கிற ஒருவிதை மனத்தில் விழுந்துவிட்டால் அந்த விதையின் ஆதிக்கமும் அதன் உணர்ச்சியுந்தான் தலைதூக்கி வேலைசெய்து பல குடும்பங்களில் பலபல மாறுதல்களை—விசித்திரங்களை—விபரீதங்களை—உண்டாக்கிவிடுவது உலகசகஜமானது. அச்சுதனுக்கு இதுவரையில் என்றுமே எத்தகைய சிறிய சந்தேகமும் வித்யாஸமும் கண்டறியாது மிகவும் அன்யோன்யமான முறையில் வாழ்க்கைச்சக்கரம் சுழன்றுவருகையில் இன்று முன்பின் அறியாத ஒரு அன்னியமாதுடன் குசமசவென்று ரகஸ்யம் பேசுகையில் தன் தலையைப்பார்த்ததும் நிறுத்தித் திருகத் திருக ஓடுவானேன்? வழக்கம்போல் காப்பிக்கொடுத்துவிட்டுத் தானும் அருகில் உட்கார்ந்து பேசாமல் அசடுவழிய ஏன் உள்ளே ஓடிவிட்டாள்? அவள்யாராக இருக்கும்? என்ன ரகஸ்யம் பேசிக்கொண்டிருந்தாள்?... என்ற ஒரு புதிய சிறு குழப்பம் அவன் மனதில் புகுந்துகொண்டதால் பலகாரத்தைச் சாப்பிடக்கூட அவனுக்கு ருசிக்கவில்லை... உரத்த குரலில் 'ஸரஸு!' என்று கூப்பிட்டான்.

உண்மையில் ஸரஸா சற்று பயந்துகொண்டே வந்து நின்றாள். அவளை அச்சுதன் ஏற இறங்கப் பார்த்துவிட்டு... "அடுப்பில் ஏதாவது காந்துகிறதா? அதனால் அவசரமாக உள்ளே போய்விட்டாயா? அந்தம்மாள் யாரு? என்ன பேசினாள் என்றுகேட்டேனே? ஏன் பதிலே பேசவில்லை? என்ன ரகஸியம்சொல்லு?" என்றுசற்றுகனத்தகுரலிலேயே கேட்டான்.

அச்சுதனும் ஸரஸுவும் விவாகமாகிப் புதிய வாழ்க்கை துடங்கி எட்டுவருஷகாலமாகிவிட்டது... ஒரு குழந்தை பிறக்கவில்லை!... முதலிலெல்லாம் தம்பதிகளுக்கு இந்த விஷயத்தில் சற்றும் குறையேயின்றி அதைப் பற்றி நினைக்கவே இல்லாது பரம சந்தோஷத்துடன் இருந்தார்கள். நாலைந்துவருஷகாலம் ஆனபிறகு ஸரஸாவுக்குத்தான் "தான் தாய் பீடத்தில் அமரும் பாக்யம் கிடைக்கவில்லையே. நமக்கும் ஒரு குழந்தை பிறக்காதா! அந்த நிகரற்ற பேரின்பத்தை நாமும் அடைந்து

மகிழுங்காலம் வாராதா!'' என்கிற குறையும் நாளடைவில் அதே ஏக்கமும் சிறுகச் சிறுகத் தோன்றி வளர்ந்து உள்ளுக் குள்ளேயே வேலைசெய்யத்துடங்கியது.

அச்சுதனுக்கோ தனக்கொரு குழந்தை இல்லையே என்கிற கவலை சிறிது உண்டாகியதேயன்றி அதை அவன் லட்சியம் செய்யவில்லை. ''நமக்கு ப்ராப்தமிருந்தால் பகவான் கொடுக்கிறான். இதற்காக நாம் கவலைப்படுவானேன்? கிழவிகள் சொல்கிறபடி சகல வ்ரதங்களும் இருப்பானேன்? இதென்ன கேலிக்கூத்து!'' என்று உதாசீனமாக எண்ணி அதைக் கண்டிப்பாய் திரஸ்கரித்துவிடுவான். ஸரஸாவையும் எத்தகைய வ்ரதமோ! ஜபமோ தபமோ நாகப்ரதிஷ்டையோ அரசப்ரதட்சிணமோ செய்யக்கூடாதென்று அடக்கி திட்டம் செய்து வந்தான்.

ஸரஸாவின் தாயார்வீட்டினருக்கும் இவர்களுக்கும் ஏற்கெனவே மனஸ்தாபம். சரியானபடி அச்சுதனை மாமியார் வீட்டில் மரியாதையாய் நடத்தவில்லை என்றும் சரியானபடி வரிசைகள் செய்யவில்லை என்றும் அவனுக்கு மனஸ்தாபம் சிறுகச்சிறுகத் தோன்றி வளர்ந்துவிட்டதால் ஸரஸாவை அனுப்பாமலும் அவர்களை மதியாமலும் இருக்கவே அந்த இடத்திலிருந்துதான் யாராவது வந்தார்களோ? என்கிற சந்தேகத்தினால்தான் ஸரஸாவை அதிகரித்த சந்தேகத்துடன் கேட்டான்.

அவன் சந்தேகித்ததுபோலவே ஸரஸாவின் தாயார் ஏதோ ஒரு புதிய வ்ரதத்தை அனுஷ்டிக்கும்படியாயும் அதைச் செய்தால் கட்டாயம் குழந்தை பிறக்கும் என்றும் அதற்கான உதவியை அந்த அம்மாளையே செய்யும்படியாயும் சொல்லியனுப்பிஇருந்ததால் இதைத் தன்கணவனிடம் சொல்வதற்குப் பயந்தாள். சமயோசிதமாய் எப்படி என்ன பொய் சொல்வது என்று கூடத் தெரியாமல் விழிக்கும் நிலைமையில் அவளுடைய பரிதாபகரமான இருப்பைக் கண்டு அச்சுதனுக்கும் மனது 'ஐயோ பாவம்' என்று தோன்றியதால் ''ஸரஸூ! நீ திக்குமுக்காடித் திணறுவதைப் பார்த்தால் உன் பிறந்த வீட்டிலிருந்து ஏதோ சமாசாரம் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதானே...வ்ரதமா! சஷ்டி வ்ரதமும் சங்கடப்பாலும் அரச ப்ரதட்சிணமும் நாகப்ரதிஷ்டையும்...இதுதானே!...சரி...சரி...போனால்போகிறது ;இதற்காக அழாதே, இதோ பாரு ஸரஸூ! பகவான் ஒருவன் இருக்கிறான். அவன் முதலில் யார்யார் தலையில் என்னென்ன எழுதியிருக்கிறானோ அதுதானே நடக்கும். நமக்கு அத்தகைய பாக்யம் கிடைக்குமானால் பகவான்கட்டாயம் கொடுத்தே தீர்வான். இதெல்லாம் எதற்கு? எனக்கு சற்றும் பிடிக்கவில்லை. இத்தகைய மனிதர்களை வரவிடாதே''...என்று

சொல்லும்போது இத்தமட்டும் பகவான் காப்பாற்றினாரே என்ற சந்தோஷம் உண்டாகி ஸரஸாவின் பயத்தை சற்று தணித்தது. "வேலையற்ற காரியத்தில் பொழுதை வீணாக்காதே. இப்போது இப்படி உபதேசம் செய்கிறவர்கள் இன்னும் சில வருஷங்கள் சென்றதும் ஸ்வீகாரம்செய்துகொள்ளும் படி உபதேசம் செய்யத் துடங்குவார்கள். எத்தகைய சனியனுக்கும் இங்கு இடங்கொடுக்காதே. நான் வெளியேபோய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஆனால், பெண்மனம் சற்று ஆசைக்கு அடிமையானது அல்லவா? அக்கம்பக்கம் இருப்பவர்கள்குழந்தைகுட்டிகளுடன் கொஞ்சி மகிழ்வதைப் பார்க்கும்போது ஸரஸாவின் ஆசை நிறைவேறும். ப்ரதி தினமும் ஸரஸா காலையும் மாலையும் பள்ளிகூடத்திற்குக் குழந்தைகள் போகும்போதும் வரும் போதும் அங்கேயேநின்றுகொண்டு வெகுஆவலாய்ப் பார்த்து மகிழ்ந்தாள். உள்ளத்திலே ஒருவித உணர்ச்சி பெருக்கெடுத்தோடும். சில குழந்தைகளைப் பார்க்கும்போது அப்படியே வாரியணைத்துக்கொண்டு முத்தமிட உள்ளம் துடிக்கும். ஆனால், முன்பின்னறியாத அன்னியக் குழந்தையைத் தான் எப்படி எடுத்துக்கொள்ளமுடியும்? மனம் குமுறும்; விசனத்துடனும் ஏக்கத்துடனும் தலை தொங்கிப் போகும்; கண்களும் நீரைக் கக்கும்.

இப்படியே அவள் வாழ்க்கையில் பலதினங்களைக் கடத்தி வந்தாள். எந்த காரியம் எப்படி இருந்தபோதிலும் பள்ளிக்கூடம்விட்டுக் கும்பல் கும்பலாக குழந்தைகள் வரும்போது வீதியில் வந்து நின்றால்தான் மனது நிம்மதி யடையும். நாளடைவில் இதைக்கூட அச்சுதன் கண்டிக்கத் தலைப்பட்டதும் ஸரஸாவின் மனம் புண்பட்டது. கண்டதற்கெல்லாம் கண்டிப்பதும் பிறர் குழந்தைகளை எடுத்துக் கொஞ்சுவதைக்கூட கூடாதென்று திட்டம் செய்வதும் அவளால் பொறுக்க முடியாமல் கணவன்மீது கோபமே உண்டாகியது. தனக்கு ஒரு குழந்தை பிறப்பதற்காக பெரியவர்கள் சொல்கிற வ்ரதாதிகளைச் செய்துபார்த்தால்தான் என்ன? அதிலும் பலிக்கவில்லை என்றால் விதி என்கிற முற்றுப்புள்ளி இருக்கவே இருக்கிறது. இவர் எதற்குக் கட்டுப்படுத்தி என் ஆசையைக் குலைத்து என் மனத்தை நோகச் செய்யவேண்டும். கடவுள் காட்டுவார். அதை நாமெடுத்துச் சாப்பிடவேண்டுமேயன்றி ஊட்டவும் வருவாரா! இதென்ன அசட்டுப் பிடிவாதம்? என்கிற எண்ணமே அதிகரித்துவிட்டதால் அந்த உணர்ச்சியின் பலன் தம்பதிகளுக்குள் இருந்த அன்யோன்யத்தைக் குறைத்தும் சதா பேதமனப்பான்மையை உண்டாக்கியும் அமைதியே குடிகொண்டிருந்த வாழ்க்கையில் சற்று கசப்பும் வெறுப்பும் கரகாத்த குரலில் பேசிக்கொள்ளும்

சத்தமும் வளர்ந்தன. ஸரஸாவின் மனவேகத்தில் சில மாதங்கள் இவருடன் சண்டைபோட்டுக்கொண்டாவது தன் தாயார் வீட்டிற்குச் சென்று முக்யமான வ்ரதாதிகளைச் செய்யலாமா? என்றுகூடத் தோன்றியது. ஆனால், அத்தனை தூரத்திற்கு அவள் மனது துணியவில்லை. "இன்று விரோதித்துக்கொண்டு சென்றுவிட்டாலும் நாளை இங்குதானே வரவேண்டும். அப்போது எப்படி இருக்குமோ! ஒரே முரட்டுத்தனமாய் என்னை அங்கேயே தள்ளிவிட்டால் பிறகு என்ன செய்வது?... அவர் அப்படிச்செய்தாலும் செய்வார். அம்மாதிரி நிலைமை உண்டாகிவிட்டால் பிறகு வாழ்க்கையே அலங்கோலமாகிவிடுமே!" என்ற பயமும் கவலையும் உண்டாகியதால்அத்தனைதூரம் போகத்துணியாது மனங்குழம்பித் தவித்தாள்

2

ஸரஸாவுக்கு விவாகமாகி சுமார் பத்துவருஷகாலத்திற்குள் வாழ்க்கையில் எத்தனையோவித அனுபவங்களைக்கண்டுவிட்டாள். கடைசியில் நிலைத்து நின்று ஆட்சிபுரியத் தொடங்கியவை தம்பதிகளிடையே அபிப்ராயபேதங்களும் மனத்தாங்கலுந்தான். மனக்கவலையினால் உடம்பு மெலிந்து போன ஸரஸாவைக்கண்ட அச்சுதனுக்கே சற்று மனம் இளகி ஏதோ ஒருவிதமான உணர்ச்சி உண்டாகியது.

அதற்கேற்றாற்போல் ஸரஸா வீதியில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்குச் செல்லும்—கூண்டிலிருந்து சுதந்திரச் சிறகடித்துப் பறந்து செல்லும் உல்லாஸப் பறவைகளைப்போல் காச்சுமூச்சென்று சத்தமிட்டுக்கொண்டுபோகும் குழந்தைகளின் விலைமதிப்பற்ற ஆனந்தக்காட்சியைப் பார்த்துக் கொண்டு வீதியிலேயே நின்றிருந்தாள் ஒருநாள்.

அச்சுதன் அன்று ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்துவிட்டான். அவன் உள்ளே போவதையும் கவனிக்காமல் தன்னைமறந்து வீதிலேயே நின்றிருந்த சமயம் குழந்தைகளின் மத்தியில் விற்பனை செய்து லாபமடைவதற்கே காத்துக் கொண்டுள்ள சில தின்பண்ட வ்யாபாரிகளிடம் ஏதோ தின்பண்டம் வாங்கிக்கொண்டு உனக்கு எனக்கு என்று இரண்டு குழந்தைகள் பலமாக அடிதடி சண்டை இட்டுக்கொண்டு வீதியில் பிடித்துத் தள்ளிவிட்டதைக் கண்டு, ஸரஸா தன்னை மறந்து ஓடிச்சென்றுகீழே விழுந்தகுழந்தையைவாரிஎடுத்துச் சமாதானம் செய்து, தானே நிறைய தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்து வீட்டிற்கு அனுப்பினாள். அந்த சிறிய இன்பமே அவளுக்கு அளவற்ற பேரின்பமாகத் தோன்றி ஆனந்தத்தையளித்தது. அந்த உணர்ச்சியில் வீதியிலேயே நின்றாள். கணவன் சீக்கிரம் வந்துவிட்டதை மறந்தேபோய்விட்டாள். ......உள்ளே ஏதோ ஓசைகேட்டதை உணர்ந்தபிறகு சடக்

கென்று நினைவுவந்து அலறிக்கொண்டு ஓடினாள். ஈஸிச் சேரில் சாய்ந்திருந்த அச்சுதன் ஸரஸாவைப் பார்த்து, "ஸரஸா! இப்படி உட்காரு.நான் உள்ளேபோய்க் காப்பியைச் சாப்பிட்டாயிற்று. இங்குவா"...என்று அவள் ப்ரமிக்கும்படி அவள் கையைப் பிடித்திழுத்து உட்காரவைத்தான். ஸரஸாவே வியந்து ஒருவிதமான லஜ்ஜையுடன் உட்கார்ந்தாள்.

அச்சு:—ஸரஸா! நான் சொல்வதைக்கேட்க நீ கோபப் பட்டாலும்படலாம். ஆனாலும் உன்னுடைய மனோவேதனையைக்கண்டு நான் சொல்கிறேன். என் தங்கை ராஜிக்கு இது 5-வது ப்ரஸவமாம். ஒன்பது மாதமாகிறதாம். உடம்பு மிகவும் பலவீனப்பட்டு நடக்கக்கூட சக்தியற்ற நிலைமையில் தவிக்கிறாளாம். ஒத்தாசைக்கும் மனிதர்கள் இல்லையாம். மிகவும் வருத்தப்பட்டு அவள் கணவன் கடிதமெழுதியிருக்கிறார். இந்தப்பாழும் பிள்ளை உனக்கு வந்திருந்தால் எத்தனை பெருமையும் சந்தோஷமும் உண்டாகும். "சாணியில் புழுப்பதுபோல் என்னையே சோதிக்கிறதே! இதற்குமுன் குழந்தைக்கு இன்னும் ஒன்னரை வயதுகூட ஆகவில்லை; இதற்குள் என்னுடைய நிலைமைக்கு ஏன் இத்தகைய பரீக்ஷையை பகவான் நடத்துகிறான்" என்று ராஜி சதா சலித்துக்கொண்டு கண்ணீர் விடுவதில் இன்னும் பலஹீனமாகிவிடுகிறாளாம். அவளை இம்முறை ப்ரஸவத்திற்கு இங்கு அழைத்துவரலாம் என்று நினைக்கிறேன். என் தாயார் இறந்தபிறகு அவள் ப்ரஸவத்திற்கே வந்ததில்லை பாவம்! அவள் வந்தால் நீயும் அவள் குழந்தைகளும் சந்தோஷமாய் விளையாடி மகிழலாம். பிறக்கப்போகும் குழந்தையை அவளை உன்னிடமே கொடுத்து விட்டுப் போகச்சொல்லலாம்...

என்று முடிப்பதற்குள் என்ன காரணத்தினாலோ ஸரஸாவுக்கு அடங்காத ஆத்திரமும் கோபமும் உண்டாகி முகம் சுளித்தது. "ஏன்! கொட்டு, மலடு என்று பட்டம்பெற்று வெறுங்கை வீணையாகக் கிடப்பதால் மாடுபோல் உழைக்க நான் வேண்டுமோ! வீதியுடன் போகும் குழந்தைகளைப் பார்க்கக்கூடாது என்று சட்டம் போடும் உங்கள் வாயே உங்கள் சகோதரியின் குழந்தைகளானால் வேலைக்காரிபோல் வேலை செய்ய சட்டத்தை மாற்றிவிடத் துணிகின்றதாக்கும். அதோடு "பிறர் இன்னும் கொஞ்சநாள் சென்றால் ஸ்வீகாரம் வாங்கிக்கொள்ளும்படிக்கும் உபதேசம் செய்வார்கள். அதைக் கேட்காதே" என்று சொன்ன வாயால் உங்கள் தங்கை குழந்தை வயிற்றிலிருக்கும்போதே ஸ்வீகாரத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டீர்களா!......போதும்! எனக்கு அந்த உபத்திரவமெல்லாம் வேண்டாம்......ஏன் என்னுடைய சகோதரிகூட எட்டுக் குட்டியும் பொட்டைநாயும் என்பதுபோல் வைத்துக் கொண்டு திண்டாடுகிறாள். அவள் குழந்தைகளில் இரண்டு

இங்கு கொண்டுவைத்துக்கொண்டால் உங்கள் மனதுபொறுக்காது.'' என்று விடுவிடு என்று பேசும் பேச்சும் இருவரிடையும் காரஸாரமாக முற்றிப் பெருஞ்சண்டைவரையில் சக்கரம் சுழன்றுவிட்டது.

அதன்பலன் எத்தனை தூரம் எப்படித்தான் முடியுமோ? யார் கண்டது! இருவரிடையே சுமார் ஒருவாரம் பேச்சு வார்த்தை இன்றி மவுனமே குடிகொண்டது. எத்தனை ஆத்திரத்துடன் கடுமையாகப் பேசிவிட்டாளோ அத்தனைக் கத்தனை வாழ்க்கையில் பெரும் பிளவு உண்டாகியதுபோல் ஒரு பயங்கரம் புகுந்துகொண்டது. எனினும் இருவரும் இதை லட்சியம்செய்யாமல் தம்தம் போக்காகவே நடந்தனர்.

ஸரஸாவின் தங்கை ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அதை வெகு அக்கரையுடன் ஸரஸா படிக்கத்தொடங்கினாள்.

'அன்புள்ள ஸரஸாவுக்கு ஸரோஜா எழுதிக்கொண்டது. உபயகுசலோபரி. உனக்கு நான் இதுவரையிலும் ஒரு கடிதமும் எழுதியது கிடையாது. இந்த சமயம் நான்வெட்கத்தை விட்டு எழுத முன்வந்ததற்கு மன்னிக்கவும். இத்தனை மக்களைப் பெற்ற நம் பெற்றோர் உன்னால் சுகப்படவில்லை. சதா கவலையாகவே இருக்கிறார்கள், எனக்கு டைபாயிடு ஜுரம் வந்திருந்தது. மிகக் கடுமையாகப் படுத்திருந்து இப்போது பூர்ணகுணமாகிவிட்டது. இதைக்கூட உனக்குத் தெரிவிக்க அப்பா சம்மதப் படவில்லை. மக்களைப் பெற்றதனால் அந்த மக்கள் மூலம் குடும்பத்திற்கும் மற்ற இதர வகை மனிதர்களுக்கும் உபகாரம் இருப்பது போக உன்னால் குடும்பத்தில் அப்பாவுக்கு கஷ்டந்தான் உண்டாகிறது. மருமகப்பிள்ளை இப்படி அலட்சியம் செய்வதால் ஏதோ குறையோ! புரசலோ உள்ளே இருக்கிறது என்ற பட்டத்தைச் சூட்டி அண்ணாவுக்குப் பெண் கொடுக்க வருகிறவர்கள் பேசுகிறார்களாம். அண்ணாவுக்கே அப்படி என்றால் இன்னும் உள்ளவர்களின் கதி எப்படி? இந்த சண்டையை எப்படியாவது தீர்த்துவைக்க எத்தனை வழிசெய்தாலும் உன் கணவரின் மூர்க்கத்தனத்திற்கு முடிவைக் காணவில்லை. என்னை டாக்டர் எங்காவது வெளியூருக்குச் சென்று ஒரு மாதமாவது இருந்தால்தான் உடம்பு தேறும் என்கிறார். பெரிய அக்காவும் அவள் கணவரும் வருந்திவருந்தித்தான் கூப்பிடுகிறார்கள். எனக்கு அங்குபோக இஷ்டமில்லை. பட்டணத்தைப் பார்க்கவும் பட்டணவாஸம் செய்யவும் ஆசையாயிருக்கிறது. ஆகையால் நீ உன் கணவரிடம் கேட்டு எழுது. நான் அங்கு வந்திருப்பதில் எனக்கு அகவுரவம் எதுவுமில்லை. நமக்குள்ளிருக்கும் சண்டைக்கு ஒரு சிறிய விமோசனமாவது உண்டாகட்டும் என்று தோன்றுவதால் நானே எழுதுகிறேன். உடனே பதில் எழுது. வரும்போது அக்காவின் குழந்தை ரமணியையும் அழைத்துவருகிறேன்.

இப்படிக்கு
ஸரோஜா'

இக்கடிதத்தைப் படித்த ஸரஸாவுக்கு தர்ம சங்கடமாகி விட்டது. தன் கணவன் சகோதரியை அழைத்து வருவதற்குக் கேட்டபோது ஆத்திரப்பட்டு வாயைக் கொட்டிவிட்டதனல் தான் தம்பதிகளிடையே மனஸ்தாபமென்கிறமேகம் சூழ்ந்து கொண்டு வாட்டுகிறது. இந்த நிலைமையில் தன் தங்கையை வரும்படிக் கடிதமெழுத முடியுமா? அதைப்பற்றி அவரிடம் கேட்கத்தான் முடியுமா? தன் தாயார் வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்தே எத்தனையோ மாதங்களாகிவிட்டன. இந் நிலைமையில் தானே இத்தனை தூரம் கடிதம் எழுதி தானே வருவதாகவும் கேட்பதைக்கண்டு உண்மையில் மனம் உருகி விட்டது. டைபாய்டில் படுத்துத் தேறியிருப்பதைப் படித் ததும் முதலில் பார்க்கவேண்டும் போன்ற ஆவல் வேறு துடிக் கிறது. தன் கணவனுக்குள்ள த்வேஷத்தில் தன் பிறந்த வீட் டின் உறவே விட்டுவிட்டதுபோன்று இதுபரியந்தம் வாழ்க்கை நடந்திருக்கிற நிலைமையில் இந்தக் கடிதம் அவளுடைய மனத் தில் அடங்கிக்கிடந்த ஆசைக்கனலைத் தூண்டிவிட்டு வேதனை செய்தது. உணர்ச்சி மிகுதியினல் கண்ணீர் கலகல வென்று வந்துவிட்டது.

65 வயது கிழவியானுல்கூட பிறந்தகம் என்ருல் இன்னும் ஆசைவிடுவதில்லை! எங்கம்மா, என்தம்பி, எங்கமனுஷ் யாள் என்று சொல்லிக்கொண்டு ஓடும் மனிதர்கள்தான் அதி கம். அம்மாதிரி ஒரு ஆசைக்கு மனத்தில் இடங்கொடுக் காத மனிதர்கள் ஒரு சிலர் இல்லாமலுமில்லை. பிறந்தகத்தைச் சேர்ந்த மனிதர்கள் ஒரு கோடி சேனை இருந்தும் அதைப் பற்றி நினைக்கவும் யோக்யதையற்ற—அன்பற்ற—அருகதை யற்ற மனிதர்களைப் படைத்துள்ளவர்களுக்கு இதயம் வரண்டு ஆசையற்றுக் கல்லாய்விடுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? உலகம் பலவிதமல்லவா?

ஸரஸா மனத்தை முறித்துக்கொண்டு பிறந்தவீட்டையே மறந்து தன் கணவனின் மனங்கோணுமல் தான் இத்தனை காலமும் நடந்துவந்தாள். என்ன இருந்தாலும் பிறந்தக மல்லவா! அந்த தனித்த ஆசையை அறவே ஒழிக்க சக்தி உண்டாகவில்லையாதலால், "என்னசெய்யலாம். எப்படித் தன் கணவனிடம் இக் கடிதத்தைக் காட்டலாம். தங்கைக்கு எப் படிக் கடிதம் எழுதலாம்?" என்கிற யோசனையில் மனது பல மாகப் போராடத் துடங்கியது. இந்நிலைமையில் வீட்டு வேலைகளைக்கூட மறந்தாள். மனக்குழப்பத்தில் பயித்தியம் பிடித்தமாதிரியாகிவிட்டது.

3

அன்றுபூராவும் ஒருவிதமான துணிவுக்கும் மனந்துவரி வில்லை. ஏன்? தன் கணவனுக்குத் தெரியாமல் தானே தன்

தங்கையை வரும்படிக்குக் கடிதம் எழுதிவிட்டால் என்ன? என்று ஒரு வேகம் தோன்றுகின்றது. உடனே அடுத்த க்ஷணமே அப்படிச் செய்தால் அதனுல் தன் கணவனுடைய கோபம் அதிகரித்து அவனுடைய ஆத்திரத்தில் தங்கையை அவமானப்படுத்திவிட்டால் என்ன செய்வது?......என்றும் கூடவே தோன்றி வதைக்கின்றது. இந்நிலைமையில் மனது ஒரு நிலையிடங்கொள்ளாமல் தவிக்கிறது. இக்கடிதத்தையே கணவனுக்குக் காட்டாமல் ஒளித்துவிட்டால் அதுவும் எப்படியாவது தெரிந்துவிட்டால என்னவாகுமோ?......என்றும் தோன்றுமலில்லை. கடிதத்தைக் கணவனிடம் காட்டிக் கேட்பதற்கும் நாத்தனுர் விஷயமாக ஏற்கெனவே நடந்துள்ள விஷயம் குறுக்கே குத்திக்காட்டுகிறது. தர்ம சங்கடமான நிலைமையில் தவித்தவாறே மேலும் இரண்டு நாட்கள் ஓடி மறைந்தன. ஸரோஜாவிடமிருந்து மற்ருெரு கடிதமும் வந்துவிட்டது. இன்னது செய்வதென்று தெரியாமல் ஸரஸா கலங்கியபடியே யோசித்து மூளைக்கும் சற்று சோர்வு உண்டாகிவிட்டது.

வாரத்திற்கு இரு தினங்களாவது ஸரஸா கோயிலுக்குப் போகாமலிருக்கவேமாட்டாள். அந்தமுறையில் அன்று கோயிலுக்குச் சென்று திரும்பிவருகையில் ஒரு வீதியின் கோடியில் இருவர் பேசிக்கொண்டிருந்தது இவள் காதில் விழுந்தது. இருட்டிவிட்டதால் அந்தப் பேச்சைக் கேட்டவாறு மறைவாக நின்ருள்.

அந்த விஷயத்தைக் கேட்டு ஒரு மின்சாரத் தாக்குதலால் அப்படியே சரீரம் பூராவும் உலுக்கிவிட்டது. "என்ன ஆச்சரியம்! தான் பெத்த குழந்தையைத் தானே விற்க விலை பேசுவதும் இந்த அக்ரமத் தொழிலுக்கு இன்னெருத்தி தரகன் ஸ்தானத்தில் நின்று வ்யாபாரம் செய்து கமிஷன் அடிப்பதும் என்ன படுமோசமான காரியம். அடாடா! அன்யாய உலகமே! ஒரு குழந்தையைப் பெறுவதற்கு எத்தனையோ தபஸ்செய்து கடவுளை வேருேடு பெயர்க்கவேண்டிக் கிடக்கிறது. பகவான் ஏராளமாகக் கொடுத்திருக்கிறவர்களின் கதியும் விதியும் இப்படியா நடக்கவேண்டும்! என்னுல் இதை நம்பவே முடியவில்லையே! கொடிக்குக் காய் கனமா என்கிற பழமொழியும் பொய்யாகிவிடுகிறதே. பெத்த தாயாருக்கே குழந்தையின் வாத்ஸல்யமும் பொறுப்பும் அற்றுவிட்டதென்ருல் இனி எதைத்தான் நம்பமுடியும். எதைத்தான் நினைக்க முடியும். பொன்னையும் பொருளையும் விற்பார் உலகில்உண்டு. தன்னையும் தன் மகளையும்கூட விற்பார் உலகில்உண்டா!..அக்ரமம்! அனியாயம்!" என்று தனக்குள் எண்ணியவளாய்ப் படபடப்புடன் நடந்துவந்தாள்.

தன் வீட்டுவாசலில் வரும்போதே உள்ளே ஏதோ சந்தடி கேட்டதுடன் ப்ரகாசமாய் தீபம் எரிந்துகொண்டிருந்தது கண்டு ஒன்றும் புரியாமல் உள்ளே வந்தாள். கூடத்தில் ஈஸிச்சேரில் இவள் நாத்தனார் படுத்திருக்கிறாள். அச்சுதன் டம்ப்ளரில் ஆகாரத்தைக் கொடுக்கிறான். குழந்தைகள் கும்மாளம் அடித்து விளையாடுகின்றன. இவைகளைப் பார்த்ததும் ஸரஸாவுக்கு இதற்குமுன் நிமிஷம்வரையிலிருந்த மனோவேகமும் உணர்ச்சியும் அடியோடு மாறிப்போய் பழையபடி

யான ஆத்திரம், கோபம், கணவன்மீது எரிச்சல் ஆக எல்லாம் ஒன்றுகூடி குபுகுபுவென்று தலைக்கேறி ஒரேஆவி கிளம்புவதுபோலாகிவிட்டது.

இவள் வரும் சமயத்திற்குச்சரியாக ஒரு லேடி டாக்டரும் வந்துசேர்ந்தாள். அச்சுதன் டாக்டரைக் கண்டதும் வெகு மரியாதையுடன், "வாருங்கள் டாக்டர்! வாருங்கள்! இவள் தான் என்னருமைச் சகோதரி. ஆதியில் இவளைநீங்கள் பார்த்திருந்தால் இப்போது பார்க்கும்போது திடுக்கிட்டிருப்பீர்கள். எத்தனை புஷ்டியாய் எவ்வளவு அழகாய் இருப்பாள் தெரியுமா? இப்பொழுது அவள் இருக்கும் பரிதாபத்தைப் பார்த்தால் என் மனது துடிக்கிறது. டாக்டர்! பேசக்கூட சக்தியற்ற நிலைமையிலுள்ள இவள் பிழைப்பாளா? என்று பயமாயிருக்கிறது. இந்தப் பாழும் கர்ப்பம் எதற்காக வரவேண்டும்? குழந்தை இல்லையோவென்று அரசமரத்தை வேரோடு பிடுங்கிச் சுற்றும் ப்ரக்ருதிகளுக்குப் பிறக்கக்கூடாதா? என்னுடன் பிறந்த ஒரே தங்கைக்கு ஏன் இம்மாதிரி வரவேண்டும்?" என்று தனது ஆத்திரம் பூராவையும் கொட்டிப் பேசினான்.

லேடி டாக்டர் சிரித்தபடியே "ஸார்! எங்களுடைய தொழில் இருக்கிறது பாருங்கள், அது உலகானுபவக் கடலில் துளைந்து ஸாரத்தை அள்ளிக்கொள்ளும் வசதியுள்ள தொழிலாகும். சிலர் ஒரு குழந்தை பிறக்காததால் ஏதாவது செய்து அக்குறையைத் தீர்க்கக்கூடாதா என்கிறார்கள். சிலர் கருவையே சிதைத்துவிடுங்கள் என்று முறையிடுகிறார்கள். சிலரோ பிறக்காமலேயே தடைசெய்து விடுங்கள் என்று அலறுகிறார்கள். இப்படி எத்தனையோ வினோதங்களைப் பார்த்துப்பார்த்து எங்களுக்கு அதில் ஒரு உணர்ச்சியின்றி மறத்துவிட்டது. உலகம் பலவிதமல்லவா! நீங்கள் பயப்பட வேண்டாம். இதைவிட மோசமான கேஸ்களெல்லாம் நான் பார்த்திருக்கிறேன்" என்று கூறியவாறு நோயாளியைப் பரீட்சித்துப் பின்..."ஸார்! ரத்தம்என்பது கொஞ்சங்கூட இல்லை. அதுதான் பலஹீனத்திற்குக் காரணம். அதோடு வீட்டில் சற்றும் ஓய்வே கிடையாது என்கிறீர்கள். குழந்தைகளின் தொந்தரவு வேறு. நீங்கள் இப்போது கூட்டிக்கொண்டு வந்ததே நல்லதாயிற்று. சரியானபடி ஓய்வுகொடுத்து மருந்துகளையும் கொடுத்துவந்தால் ப்ரஸவத்திற்குள் சரியாகிவிடும். பயப்படாதீர்கள்" என்று சாந்தமாய்க் கூறினாள்.

அச்சு:—என்னமோ! டாக்டர்! இம்மாதிரி கொத்து உயிர் குலைஉயிராகப் பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா! கல்யாணமே செய்யாமல் கன்னிகையாகவே வைத்துச் சரியானபடி தொழிலில் பழக்கிவிட்டால் நிம்மதியானமுறையில் ஆரோக்யமாய் வாழ்நாள் செல்லும். என்ன சொல்லுகிறீர்கள்?

டாக்டர்:—(கடகடவென்று சிரித்தாள்.) பிறகு...''ஸார்! ரோஜாமலர் என்கிற ஒரு சிறிய கதைப்புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். அதுவே உங்களுக்குப் பதில் சொல்லும். நான் வருகிறேன். இந்தம்மாளை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள் ளுங்கள். இந்தமருந்துகளைக் கொடுங்கள். வாரத்திற்கு நான்கு ஊசி ஏற்றவேண்டும். அதற்கான மருந்து இதோ. இதை வாங்கிவையுங்கள். நான் வந்து செய்கிறேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றாள். அச்சுதனுக்குள்ள ஆத்திரத்தில் தங்கையைப் பார்க்கப் பார்க்க அவர்களுடைய புக்ககத்தினர்மீதுதான் அடங்காத கோபம்மூண்டது.

4

வெளியிலிருந்துவந்த ஸரஸாவுக்கு ஒன்றுமேதோன்றாத ஆத்திரந்தான் தலைக்கேறியது. தன்னை அலட்சியம் செய்து விட்டுத் தன் கணவன் இத்தகைய காரியத்தைச் செய்திருப்ப தால் ஏற்கெனவே அவன்மீதிருந்த கோபமும் த்வேஷமும் பின் னும் தலைக்கேறின. நாத்தனாருடன் பேசுவதா? வேண் டாமா? என்கிற எண்ணம் வேறு போராடுகிறது. லேடி டாக்டர் வந்ததும் அவளிடம் தன் கணவன் வெகு சகஜமாய்ப் பேசும்மாதிரியும் அதில் தன்னை ஏளனம் செய்து குத்திக் காட்டிப்பேசுவதையும்கேட்டு தாங்கமுடியாத விசனமும் உண் டாகிய வேகத்தில் தடதடவென்று உள்ளே போய்விட்டாள். அவள் உள்ளத்தில் வேலைசெய்யும் போராட்டம் அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. தன்னைக் கேட்காமல் தன் கணவன் இம்மாதிரி செய்திருக்கையில் தான்மட்டும் ஏன் தன் தங்கையை தன்னிஷ்டப்படி வரவழைக்கக்கூடாது என்று தோன்றியதால் உடனே அதே ஆத்திர வேகத்தில் தன் தங்கையை வரும்படிகடிதமெழுதி அப்போதே தபால்பெட்டி யில் தானே போய்ப் போட்டுவிட்டும் வந்தாள். அதன் பிறகு தான் அவள் நெஞ்சையழுத்தும் பாரம் சற்று நீங்கியது. அது மட்டுமின்றி தான் ஏதோ மகத்தான வெற்றியைக் கண்டுவிட் டதுபோன்ற சந்தோஷமும் த்ருப்தியும் வேறு உண்டாகியது.

ஊரிலிருந்துவந்தவளைவிசாரிப்பதா? வேண்டாமா? விசா ரிக்காமல்போனால் ஏதாவது நினைத்துக்கொள்வாளோ என் னவோ? என்கிற எண்ணமும் கூடவே தோன்றாமலில்லை. இத் தனை குழப்பத்திற்குப்பின் சமயல் கட்டிற்குப் போனாள். என்ன ஆச்சரியம்! ஒரு பாட்டி சமையல் செய்துகொண்டிருப் பதைப்பார்த்ததும் இவளுடைய வியப்பும் திகைப்பும் கூடவே ஆத்திரமும் தலைதூக்கி உச்சஸ்தாயியை எட்டின. ''பாட்டி! நீங்கள்யாரு?'' என்று சற்று அதட்டியகுரலிலேயே கேட்டாள்.

பாட்டி அப்போது அம்மியில் ஏதோ அரைத்தவாறு வேறுபுறமாகத் திரும்பிக்கொண்டிருந்ததால் பதிலே இல்லை.

மறுபடியும் ஸரஸா ஆத்திரத்துடன் "பாட்டி! நீங்கள் யாரு? உங்களை யார் வரச்சொன்னது?" என்றுகேட்டாள். ஊ ஹூம்! அதற்கும் பதிலில்லை. தன் கணவன் வேண்டுமென்றே சமயல் காரியைக்கூட என்னிடம் பேசாமலிருக்கும்படி திட்டம் செய்து அமர்த்தியிருப்பதாக எண்ணி மேலும் கோப மடைந்து சமயற்காரியின் எதிரில்போய் இருகைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு அதிகார தோரணையுடன் "உங்கள் எஜமானரின் உத்தரவு இதுவா?" ...என்று காரஸாரமாக விழித்த படி கேட்டாள். அம்மியில் அரைத்ததைக் கிண்ணியில் வழித்துக்கொண்டு திரும்புகையில் ஸரஸாவைத் தற்செயலாய்ப் பார்த்ததும் வெகுவெகு மரியாதையுடன் கிண்ணத்தைக் கீழே வைத்துவிட்டுக் கையைக்கூப்பி நமஸ்கரித்தபடியே "நீங்கள் தான் வீட்டு எஜமானியம்மாளா?...நீங்கள் அரைக்கவேண்டாம்...நானே அரைத்துக் கொள்வேன். எனக்கு இந்த வேலை எல்லாம் த்ருணம்தான்" என்றாள்.

ஸரஸாவுக்குள்ளகோபம் பின்னும் அதிகரித்தது. "என்ன! நான் அரைக்க வந்தேனு? வாயைமூடு. நீ யாரு? உன்னை யார் இங்கு வேலைக்கு அமர்த்தினர்கள்" என்று சற்று முடுக்காகவே கேட்டாள். கிழவி, "இதுவா! தேங்காய் துகையல்...பொழுது போய்விட்டதால் மணத்தக்காளிக்காய் வத்தல் குழம்பும் தேங்காயும் பருப்பும் துவையலும் சீக்கிரமாக செய்து அப்பளாம் சுட்டுவைக்கச் சொன்னர்...உங்களுக்கு வேறே ஏதாவது வேணுமானல் சொல்லுங்கோ பண்ணுகிறேன்" என்றாள்.

அதற்குப் பிறகுதான் இந்தக் கிழப்பிணம் வெறும் செவிடு என்று யூகித்துக்கொண்டு அவளையே உற்றுப் பார்த்தாள். "ஏன்! என்ன பார்க்கிறீர்கள்? நான் நல்ல உயர்ந்த ஜாதி குலத்தைச் சேர்ந்தவள்தான். சமயல் பண்றத்துலே என்னை மிஞ்சினவாளே கிடையாதுன்னு பேர் எடுத்தவளம்மா நானு. இன்னிக்கி சாப்பிட்டுப் பார்த்தால் தெரியும்" என்றாள். ஸரஸாவுக்குள்ள கோபத்துடன் சிரிப்பும் வராமலில்லை. "சமயலில் நற்சாட்சிப்பத்திரம் பெற்றவளா நீ"...என்று வாய்விட்டுச் சொன்னாள்.

கிழவி:—ஆகா.........பாவக்காய்பிட்லே சக்கைப்ரதமன் கோளான் காளான் கூட்டான்...முதலிய மலையாள சமயல் முதல்தரமாய்ச் செய்வேன்.

ஸரஸா:—அடக்ரகசாரமே!...இதென்னகர்மகாண்டம்!...

கிழவி:—கோங்கூராசட்ணி, சிந்தகாய தொக்கு, ஆவக்காய் இதெல்லாம்கூட ப்ரமாதமா பண்ணுவேன்......எங்க கூட்டமே சமயல் செய்வதில் கைதேர்ந்தவர்கள்.

ஸரஸா:—போதும் உன்பெருமை...சனியனே!...உன்னை யார் ஏற்பாடு செய்தது? சொல்லித்துலே? என்றால் ஏதோ அடுக்குகிறாயே...

கிழவி:—என்ன சொன்னங்கோ...அடுப்பில் என்னவென்று கேட்கிறீர்கள்; சாதம் கொதிக்கிறது...இதோ பாருங்கோ... எனக்கு கொஞ்சம் காது மந்தம். அவ்வளவுதான்; கொஞ்சம் உரக்கப் பேசினு போரும். 5 நிமிஷத்திலே சகலமும் செய்து முடிப்பேன். இப்படி ஒக்காருங்களேன்...

மிகுந்த கோபத்துடன் வெளியே வந்தாள். அதே சமயம் கணவன் மருந்துகள் வாங்கச் சென்றிருந்தான். ஈஸிச்சேரில் படுத்திருந்த நாத்தனர் மெல்ல எழுந்து ஸரஸா நிற்குமிடத்திற்குத் தட்டித்தடுமாறி வந்து "மன்னீ! நமஸ்காரம்! கோயிலிலிருந்து இப்போதுதான் வருகிருயா? வெகு நாட்களுக்குப்பிறகு நாம் இப்போதுதான் சந்திக்கிறேம். இந்த சனியன் பிடித்த பிள்ளை உனக்கு வந்திருக்கக்கூடாதா? ஏனே என்னைக் கடவுள் சோதனை செய்கிருன்...நீ ஏன் இப்படி மெலிந்துவிட்டாய்...உடம்பு ஒன்றுமில்லையே" என்று கூறியபடியே தான் கொண்டுவந்திருந்த தாம்பூலத்தைத் தட்டுடன் கொடுத்தாள். அதில் கண்ணைக் கவரும்படியான ஒரு நல்ல ஸரிகைத்துண்டும் இருந்தது.

கையைநீட்டிக் கொடுத்தவாறு தானே.முன்வந்து பேசும் நாத்தனரிடம் எப்படி பதில் பேசாமலிருப்பது என்ற கலவரம் உண்டாகியது.எனினும்அதை யடைக்கிக்கொண்டு தாம்பூலத் தட்டை வாங்கி யொருபுறம் வைத்துவிட்டு, ஏனேதானே வென்ற முறையில்..."உடம்புக்கென்ன கேடு!ஒன்றுமே இல்லை. நன்ருகத் தின்றுவிட்டு செக்குலக்கையைப் போலிருக்கிறேனே...நீங்கள்தான் இளைத்திருக்கிறீர்கள். உங்கள் கணவர் வரவில்லையா? அவரும் லீவு எடுத்துக்கொண்டு வந்திருக்கலாமே...என்று குத்தலாகக் கூறினுள். இவ்வார்த்தை அவளுடைய மனத்தைப் புண்ணுக்கிவிட்டது. அதைப் பின்னும் தூண்டிவிடுவதுபோல் அவ்விடத்தைவிட்டும் போய்விட்டாள்.

பாவம்! பூர்ண கர்ப்பிணியாயும் நோயாளியாயும் உள்ள அவள் மனது பின்னும் வேதனையுற்றுத் தவித்தது. தன் மீதுள்ள பாசத்திற்காகத் தன் அண்ணன் இவளுடைய சம்மதத்தைப் பெறுமலேயே தன்னை அழைத்துவந்துவிட்ட ரகஸ்யம் நன்ருகப் புலனுகிவிட்டது. இத்தனை வருஷங்கள் இல்லாமல் அசட்டுத்தனமாய் நான் ஏன் கடிதம் எழுதினேன்? என்னவிருந்தாலும் கூடப்பிறந்த பாசத்தை விலக்கமுடியாமல் வீட்டில் தம்பதிகளுள் பெரும்பிளவை உண்டாக்கிக் கொண்டு என்னை எதற்காக வரவழைத்தான்? என் மீதுள்ள அன்பினுல் அவன் இல்வாழ்வில் கசப்பும் வெறுப்பும் உண்டாக்கிவிட்ட பாபத்திற்கு நான் ஆளாவதோடு இவளுடைய முகத்திலடிப்பையும் சுறுக்கென்று பாணம்போல் தைக்கும் வார்த்தைகளையும் எப்படிச் சகித்துக்கொண்டு இங்கிருப்பது? ஓய்வுக்காக வந்த இடத்தில் தீராத மனநோயல்லவா குடி

கொண்டுவிடும்போலிருக்கிறது. அடக்ரகசாரமே! அண்ணா இப்படித் தானே பெருந்தனம்செய்திருப்பான் என்று நினைக்கவே இல்லையே! மன்னியுடன் கலந்து யோசித்துத்தான் இருவரும் மனமொத்து என்னை அழைத்திருப்பதாக எண்ணி வந்தேன். என்ன முட்டாள்தனமாகிவிட்டது! இங்குவந்த உடனேயே திரும்பிப் போனாலும் அங்கு அவமானமும் பரிகாஸமுமாகிவிடுமே...உம்!...என்று அம்மா மறைந்தாளோ அன்றே வசனத்தின்படி தாயோடு போயிற்று பிறந்தகத்துச் செல்லம் என்று ஆகிவிட்டது. அப்போது எதற்கு நான் இந்த நப்பாசைகொண்டு வந்தேன். அண்ணாவாட்டும் எப்படியாவது அவனிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு போய்விடுவதே சரி; என்னால் ஒருவிதமான உபத்திரவமும் பிறருக்கு வேண்டாம். நான் செய்த பாவத்தை நானல்லவா அநுபவிக்க வேண்டும். என்னுடன் பிறந்த தோஷத்திற்காக அவனுடைய இன்பவாழ்க்கையில் ஏன் துன்பம் நிறையவேண்டும்....என்று பலபல யோசனைகளினால் மனங்குழம்பி இதயம் புண்ணாகிக் கண்ணீர் பெருகிவிட்டது.

அதைத் துடைத்துச் சமாளித்துக்கொண்டு தானே முனைபவாறு குழந்தைகளுக்கு ஆகாரம் போடவந்தாள். இதற்குள் சமயல்காரப் பாட்டி "அம்மா! உன்னைப் பார்த்தாலே மனது உருகுகிறது. பாவம்! நீ இங்காவது சற்று நிம்மதியாயிரும்மா! நான் போடுகிறேன். போய் படுத்துக்கொள்ளு. உங்க அண்ணா தங்கக் கம்பின்னாகம்பிதான். 'என் தங்கையை நீ தான் உள்ளங்கையில் ஏந்தி காப்பாற்றவேண்டும் நீ தான் அவளுக்குத் தாயார்மாதிரி பரிந்து செய்யவேண்டும். நீ எதற்கும் யாரையும் எதிர்பார்க்கவேண்டாம். நான் சொல்லியபடி செய். உன்னைத்தான் நம்பி வைத்திருக்கிறேன். என் மனைவி சற்று கோபக்காரி. அவள் எது சொன்னாலும் நீ லட்சியம் செய்யாதே. குழந்தைகளையும் ராஜியையும் நீயே கவனித்துக்கொள்ளு; அவளிடம் காட்டாதே' என்று கண்டிப்பாய்ச்சொல்லியிருக்கிறார், நான்நல்லஅநுபவம்வாய்ந்தபெருச்சாளிதெரியுமா! தக்காருக்குதக்கபடி நான் நடப்பேன். என்னை எல்லோரும் நல்ல கைராசிக்காரின்னுகொண்டாடுவா! ஏதோ கடவுள் கிருபையில் நீ பெத்து பொழச்சு குழந்தையும் கையுமா எழுந்தாபோதும். அவ சிறுசு. அதோடு அநுபவமில்லாதவள். அவள் கையிலே நான் காட்டவேமாட்டேன். தெரிஞ்சுதா?...என்று தன்போக்காக தானே சகலத்தையும் கூறி முடித்துவிட்டாள்.

இதை தூரவிருந்து கேட்டுக்கொண்டிருந்த சரளாவுக்கு மேலும் எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோலாகிவிட்டதும் கணவன்மீது அபாரமான கோபம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. கேவலம் ஒரு சமயல்காரியிடம் இம்மாதிரி

183167.

அவமானப்படுத்துவதுபோல் தன்னைப்பற்றி லட்சியம் செய்யாமலிருக்கும்படி சொல்லியதானது மிகவும் வருத்தமாகி விட்டது. சாப்பிடக்கூட வராமல் போய்ப் படுத்துவிட்டாள். தன் கணவன் தன்னை அலட்சியப்படுத்தி ஸ்வதந்திரமாக நடப்பதைப்போல் தானும் தன் சகோதரியை வரவழைத்து அவனுக்கு எதிராகச் செய்தே தீரவேண்டும். அப்போதுதான் மனது நிம்மதியாகும் என்று மூடத்தனமாயும் அறிவற்ற முட்டாள் பிடிவாதத்துடனும் ஒரு பெரும்பகை நெஞ்சில் புகுந்து வேர் ஊன்றிவிட்டது. இது மகா பாதகமான எண்ணமாயிற்றே...கணவனைக்கூட எதிர்த்துக்கொள்ளலாமா! அவன் கடவுளுக்குச் சமமானவனல்லவா! கணவன் மனம் நோகநடந்தால் காலவெள்ளம் புரள்வதுபோல் விபரீதமும் விபத்துமல்லவா புரண்டுவந்துவாழ்க்கை வ்ருட்சத்தின் ஆணிவேரையே ஆட்டிவிடுமல்லவா! பெண்களின் கடமை இது வல்லவே...நாம் முறைதவறி நடப்பது கடவுள் சித்தத்திற்கு ஏற்குமா!...என்ற எண்ணம் ஒரு திவலைகூட அவளுக்குத் தோன்றவில்லை. பேயாட்டத்தின் தாண்டவம் அவளுடைய உள்ள-அரங்கத்தில் ப்ரமாதமாக ஆடத்தொடங்கியது.

5

ராஜிக்கு உண்மையில் விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டிக்கொண்டதுபோலத்தான் தோன்றியது. "எத்தனை தான் நான் கஷ்டப்பட்டாலும் என் கணவன் வீட்டில் நான் இருக்கையில் அது துன்பமாக எனக்குத் தோன்றவில்லை. புத்திகெட்டதனமாய் நான் வந்துவிட்டது மகா பிசகு எனபதை உணர்ந்த பின்னரும் இங்கிருக்கலாமா? எப்படியாவது அண்ணனிடம் சொல்லிக்கொண்டு நல்லதனமாகவே நாம் திரும்பிப்போய்விடவேண்டும்" என்று மனத்திற்குள் தீர்மானித்துக்கொண்டாள்.

ஏற்கெனவே கவலை தோய்ந்து சுருங்கியிருந்த முகம் பின்னும் பொலிவிழந்து விசனமே உருவாகக்காணப்பட்டது. வெளியில் சென்ற அச்சுதன் மருந்துகளை வாங்கிக்கொண்டு முன்வந்த அதே டாக்டருடன் வந்து சேர்ந்தான். டாக்டர் ஊசிகுத்தி மருந்தை ஏத்திய பிறகு, "அம்மா! நீ கவலைப் படாமல் சந்தோஷமாயிருந்தால்தான் மருந்து உடம்பில் வேலை செய்யும். இல்லாவிட்டால் ப்ரயோஜனமில்லை. என்று சொல்வதற்குள், ராஜி மெல்லசமாளித்துக்கொண்டு"டாக்டர்! நான் இறந்துவிடுவேனோ என்று கவலைப்படுவதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அந்த எண்ணமே என்மனத்தில் கிடையாது. 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கிறான்' என்கிற தைரியமும் நம்பிக்கையும் எனக்கு உண்டு. அதற்காக நான்

கலங்கவில்லை. வந்து இறங்கிய உடனேயே இப்படி பேசு கிறேனே என்று நீங்களும் அண்ணாவும் நினைக்கலாம். நான் இதுவரையில் என் கணவரைப் பிரிந்திருந்ததே இல்லை. ஏதோ அண்ணாவின் அழைப்புக் கடிதம் என்னைத் தூண்டி விட்டது. அதனால் ஓடிவந்துவிட்டேன். அவரைப் பிரிந்து இங்கு குழந்தைகளுடன் நான் தங்குவதற்கு முடியாது என்று தோன்றிவிட்டது. நானும் குழந்தைகளும் இல்லாது அவரும் ஏங்கிவிடுவார். ஏதோ ஆசையின் வேகத்தில் வந்துவிட்டேன். நாளைபொறுத்து மறுநாள் நான் ஊருக்கே போய்விடுகிறேன் டாக்டர்! அங்கு சென்றால்தான் மனம் நிம்மதியாகும். ஆகையால் இதே மருந்துகளை அங்கு சாப் பிடுறேன். அங்குள்ள டாக்டரிடம் ஊசிகுத்திக்கொள் கிறேன். இன்னும் நாள் சென்றால் ப்ரஸவ காலம் ஸமீபித்து விடும். ஆகையால் நான் நாளை மறுநாள் வண்டிக்குக் கிளம்பு கிறேன்.......அண்ணா! நீ கோபிக்காதே...மன்னித்துவிடு... டாக்டர்! நீங்கள் அண்ணாவுக்குச் சொல்லுங்கள்''....என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

இதற்குக்காரணம் அச்சுதனுக்குச் சடக்கென்று புரிந்து விட்டது. தன் மனைவியின் அசட்டுத்தனமான செய்கைதான் இதற்குக் காரணம்; வேறெதுவும் இல்லை. தான் வெளியே போய் வருவதற்குள் ஏதோ நடந்திருக்கிறது என்று புரிந்து கொண்டான். எனினும், அதை எப்படி வெளிக்குக் காட்டிக் கொள்வது. சகலத்தையும மறைத்துக்கொண்டு ''ராஜி! இதென்ன பேச்சம்மா; உன் கணவரை லீவு வாங்கிக்கொண்டு இங்குவந்து இரண்டு மாதம் கூடஇருக்கும்படி எழுதியிருக் கிறேன். ஆகையால் அவர் வந்துவிடுவார். பயப்படாதேம்மா! அசட்டுத்தனமாகப் பேசாதே'' என்றான்.

டாக்டர் சிரித்துக்கொண்டே ''ராஜி! நீ இனி ரயில் ப்ர யாணத்திற்கு லாயக்கில்லை என்பதை மறந்துபேசாதே. நாளை மறுநாள் நீ கிளம்பினால் நடுவழியில் ப்ரஸவமாகிக் குழந்தை யுடன்தான் போக நேரும். ஆகையால் அந்த ஆசையைவிடு. நீ இப்போது இத்தனை தூரம் ப்ரயாணம் செய்ததே தப்பித மாகும். நீ பரிபூர்ண ஓய்வு எடுத்துக்கொண்டு நிம்மதியாக இருப்பதைப்பாரம்மா! தாயார் வீட்டிற்கு வருவதென்றால் 65 வயது கிழவிகூட ஆசைப்படும்போது நீஇப்படிசொல்வது எனக்கு வியப்பாகஇருக்கிறது.நீ சொல்வது மிகவும் உண்மை. அதுதான் சிறந்த முறையாகும். அதை நான் ஆமோதிக் கிறேன். எனினும் இப்போதுள்ள நிலைமையில் நீ போகக் கூடாதம்மா. உன் கணவரைத்தான் வரும்படி கடிதமெழுதி யிருக்கிறாரே. அதற்குப்பிறகு கவலை எதற்கு? சரி நான் வரு கிறேன்'' என்று தட்டிக்கொடுத்தவாறு கூறிச்சென்றாள்.

ஏற்கெனவே அவரும் லீவு எடுத்துக்கொண்டு வரக் கூடாதா என்று குத்தலாகக் கூறிய மன்னியின் வார்த்தை இன்னும் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அதற் கேற்றுப்போல் அண்ணன் அவரை வரச்சொல்லி எழுதியிருப் பதை எண்ணிக் கலங்கினுள். அவரும் பாசம் கேட்காமலும் இங்கு உள்ளே இருக்கும் ஆபாசம் தெரியாமலும் வந்துவிட் டால் அவமானப்பட்டு விடுவாரே. அவருக்கு ஏன் இந்த கதியை நாம் தேடவேண்டும். என்னுடைய அசட்டுத்தனத் தினுல் நான் இங்கு வந்து வாரிக்கொள்வது போதாதா: மகா கண்யமும் மரியாதையும் பொருந்திய அவருக்கு எதற்காக இந்த முகத்தடியும் அலட்சிய பரிமாற்றமும்! என்று எண்ணி எண்ணி மனம் ஏங்கியது. அண்ணனின் மனம் புண்ணுகும் படி உடனே எதுவும் சொல்லவேண்டாம் என்று தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டாள்.

இரவு முற்றும் தூக்கமே பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்து மிகவும் பலவீனப்பட்டு பெருமூச்சுவிட்டுத் தவிப் பதைப்பார்த்தஅச்சுதனுக்கு அவளையறியாத சங்கடமும் பை சாச குணமுடைய தன் மனைவியின் போக்கில் கோபமும் ப்ர மாதமாக வந்தது. இருப்பினும் அவளிடம் தான் நேராக சென்று கோபித்துக்கொண்டால் அந்த ரஸாபாஸத்தைக் கண்ணுற்ற ராஜி பின்னும் வருத்தப்படுவாள் என்பதற்காகப் பொறுத்திருந்தான். ராஜியை எங்காவது அழைத்துப் போகலாம் என்ருல் இடமும்இல்லை. எதற்கும் சந்தர்ப்பமும் எக்கச்சக்கமாக விருப்பதால் குழம்பித் தவிக்கும் நிலைமையில் அவனும் தூங்கவில்லை.

காரணமில்லாத நிலைமையில் கோபமும், மனஸ்தாபமும் கொண்டு வீண் பகையை மலைபோல்வளர்ப்பதும், அதற்கு கண்ணு மூக்கு வைத்துக் கயிறுதிரித்து த்வேஷத்தையே பாராட்டிப் பறையடிப்பதும், தனக்கு த்வேஷப்பட்டவர் களிடம் தனக்கு வேண்டியவர்கள்கூட அண்டக்கூடாது என்று அசட்டு ஆணவச்சட்டம் விதித்து அவர்கள் மனத்தை யும் புண்படச்செய்வதும், உள்ளே விஷத்தை நிரப்பிக் கொண்டு மேலுக்கு வெகு சாமர்த்தியமாய் உறவாடிப் பேசிப் ப்சப்புவதும் சிலப்ரக்ருதிகளிடம் கண்டு சிரிப்பது உலக விசித் திரங்களில் ஒன்று. அந்த ரகத்தில் சேர்ந்த ஸரஸா எத் தகைய முக்ய காரணமுமின்றி, தானுக ஒரு மனேபாவத்தை உண்டாக்கிக்கொண்டு தன் கணவனிடமே படபடத்து நடந்து கொண்டு விரோதத்தை விலைக்கு வாங்கியதுபோல் தானே சகலமும் அசட்டுத்தனத்தினுல் செய்துகொண்டதை மறந்து தன்னை அவமானப்படுத்திவிட்டானே என்ற ஒரே எண்ணத் துடன் அதையே நினைத்துக்கொண்டு தூக்கம் பிடிக்காமல் அவளும் புரண்டு படுத்துக் கலங்குகிருள்.

கடிதம் சென்றதும் தன் தங்கை வந்துவிட்டால் என்ன செய்வாரோ! என் மீதுள்ள கோபத்திற்கு அவள் மீது ஆத்திரத்தைக் காட்டி அவமானப்படுத்தி விடுவாரோ! அப்படிச் செய்துவிட்டால் என்னசெய்வது? அவள் மிகவும் கோபக்காரியாயிற்றே. இதற்குத்தானு என்னை வரவழைத்தாய் என்று பெரிய தடபுடலை அவள் வேறு ஆரம்பித்தால் என்ன செய்வது. இவள் வேறு வந்து படுத்திருக்கிறுள். அவள் கண்முன்பு இன்னும் பரிகாஸமாகவன்றோ முடியும். ஏதோ அவசரப்பட்டு ஆத்திரத்தில் எழுதிப்போட்டுவிட்டோமே. ...என்ற யோசனை வாட்டுகிறது.

ஒரே சமயம் மூன்றுபேர்களும் மூன்றுவிதமான குழப்பத்துடன் புரண்டு தவிக்கிறுர்கள். காலம் தன் கடமையை வழுவாது செய்வதில் பின்வாங்கவில்லை. அதைப் பார்த்தும் மனிதர்கள் பாடம் கற்றுப் பயனடையாமல் பாழாகிறுர்கள். வ்யாதியஸ்தர்களுக்கும் வ்யாகூலக்காரர்களுக்கும் இராப்பொழுது மலைபோல் வளர்வது சகஜந்தானே! தெளிந்த மனத்துடனிருப்பவர்களுக்கும் உழைப்பாளிகளுக்கும்பொழுது ஒருநொடியில் விடிவதுபோலத்தோன்றும். ஸரஸாவுக்கு மலைபோல் வளரும் அதே பொழுது, அடுத்தவீட்டு அம்புஜத்திற்கு அரைநொடியில் கழிந்துவிட, "ஐயோ! இதற்குள் பொழுது விடிந்துவிட்டதே. காப்பியாகவேணுமே..வேலைகிடக்கிறதே".. என்று பதைபதைக்கக் கூறுவதும் இவள் காதில் விழாமலில்லை.

தன் தங்கைக்காகவே அச்சுதன் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டுவிட்டான். அன்று எத்தகைய சம்பவமும் இன்றிப் பொழுதுசென்றது. மூன்றும் நாள் அதிகாலையில் வாசலில் ஒரு வண்டிவந்து நின்ற ஓசையைக் கேட்டு ஸரஸா ஓடிச்சென்றுள். தன்னருமைத்தங்கையும் அக்காவின் குழந்தைகளும் வந்திறங்கினுர்கள். உள்ளுக்குள் சந்தோஷம் ஒருபுறம்; தான் செய்துள்ள இக்காரியத்தினுல் கணவன் என்ன சொல்வாரோ! எப்படி நடந்துகொள்வாரோ! என்கிற பயத்தினுல் ஸரஸாவின் இதய ஓட்டம் அதிகரித்து டக் டக்கென்று அடித்துக்கொள்கிறது. ஒருபுறம் தங்கையைப் பார்க்க ஆசை சிறிது தலைதூக்குகிறது. இத்தகைய உணர்ச்சியுடன் வாசலுக்கு ஓடிவந்து "ஸரோஜா! வாம்மா! கண்ணு! ரமணீ! ஓடியா!...ராஜு....வனஜா...வாங்கோ"....என்று தலாதலா பெயரைச் சொல்லி யழைத்துக் குலாவியவாறு சிறிய பையனைத் தூக்கிக்கொண்டு கன்னம்பூரிக்க முத்தமிட்டாள். மூட்டைமுடிச்சுகளைத் தானே எடுத்துக்கொண்டுபோய் வைத்தாள். ஸரோஜா மிகவும் மெலிந்திருந்தாள். எனினும் அவளுடைய இயற்கையான அழகும் வசீகரமும் பொலிவுடன் ப்ரகாசிப்பதைக் கண்டு ஸரஸாவே வியப்புற்றுள்.

தன் பரிவாரங்களை நேரே மாடியிலுள்ள தன் தனி விடுதிக்கு அழைத்துச் சென்றாள். குசலப்ரசனம் செய்தபடியே காலை ஆகாரங் கொடுத்து தடபுடலாக விசாரித்துப் பூரித்துப்போனாள். தன்னுடன் பிறந்த சகோதரியின் வருகையால் தன் மனம் பூரித்துப் புலகிதமடைவதுபோல் தன் கணவனுக்கும் இயற்கையாயுள்ள அன்பினால் வாத்ஸல்ய உணர்ச்சி உண்டாகாதா! அதுபோல் அவன் நடப்பதும் சகஜந்தானே. சகோதர பாசம் என்பது தனித்த சக்திவாய்ந்ததல்லவா! என்பதை அடியோடு மறந்தேபோய் தன்னுடைய தற்போதைய மனோபாவத்திற்கு ஏற்றாற்போலவே உணர்ச்சிகளும் தோன்றினவேயன்றி கணவனின் நிலைமையைத் தனித்து மதிப்பிட்டுப் பார்க்கவில்லை.

இந்த குழந்தைகள் வந்ததைப் பார்த்ததும் ராஜியின் குழந்தைகள் குழந்தை ஸ்வாபத்துடன் இவர்களுடன் விளையாட ஓடிவந்தார்கள். அக்குழந்தைகளைப் பார்த்த ஸரோஜா! இது யார் குழந்தைகள்? அத்திம்பேர் எங்கே? என்றாள்.

ஸரஸா:—ஆமாம்! யார் குழந்தைகளானால் என்ன?..என்னுடைய நாத்தனார் வந்திருக்கிறாள். அவளுடைய பரிவாரங்களே இவை. அத்திம்பேருக்கு லோக நினைவே கிடையாது. தன் தங்கையின் குலாவலில் அவர் என்னைப் படுத்துகிறபாடு நானாக இருக்கவே பொறுக்கிறேன். அந்த ராட்சஸி அத்தனை தூபம் போட்டுவைத்திருக்கிறாள். அவர் என்னிடம் பேசியே எத்தனையோ நாளாகிவிட்டது. நான் வேம்பாக ஆய்விட்டேன். நாயின்பின்னே நாலு, பன்னியின்பின்னே பத்து என்பதுபோல் வருஷம் தவறாது இவள் பிள்ளை பெறுவதற்கு அண்ணன் உதவி செய்யவில்லையாம். இந்த முறை அதையே வ்யாஜமாக சண்டைபோட்டுக்கொண்டு தானே வந்துவிட்டாள். இவருக்கு வரும் 150 ரூபாய் சம்பளத்தில் வீடு திவாலாகித் தான் போகிறது!

ஸரோஜா:—ஏன் அக்கா! உன் நாத்தனார் அத்தனை பொல்லாதவளா? ராஜி மிகவும் நல்ல பெண்ணு என்று அம்மாள் அடிக்கடி சொல்லுவாளே. நீ ஒரேயடியாக இப்படிச் சொல்கிறாயே!

ஸரஸா:—போதுமே வயிற்றெரிச்சல். அம்மாவுக்கு இந்த ராட்சஸியைப் பற்றி என்ன தெரியும்? என் கல்யாணத்திற்குப் பிறகு அவள் எங்கே இவளைப் பார்த்தாள். பார்ப்பதற்கு பூனை போலிருப்பவர்கள் தான் புலிக்குமேலாகப் பாய்வார்கள் தெரியுமா? ஏதோ கூடப்பிறந்த பாசத்தினால் நீ எழுதிய கடிதத்தைக் கண்டு மனங்கலங்கி உன்னை வரும்படி எழுதிவிட்டேன். நீ வீணாக அந்த மகாராஜியிடம் வலுச்சண்டையை விலை கொடுத்து வாங்காதே. அத்திம்பேரிடமும் நீ த்வேஷத்தைக்

இளைப்பாதே. நிம்மதியாக என்னுடனேயே இரு—என்று திட்டம்போட்டாள்.

விவாகமாகிய நாட்களிலிருந்து மனஸ்தாபமே உருவாகி வளர்ந்திருப்பதை அறிந்திருப்பதால் ஸரோஜாவுக்கு அக்கா சொல்வதுதான் சகலமும் உண்மை என்று தோன்றியது. "இத்தனை பொல்லாதவளாக்கா உன் நாத்தனூர்?" என்று பரிதாபகரமாயும் கேட்டாள்.

"உம்! சகலத்திற்கும் காரணம் பகவான் சோதிக்கிறார் பாரு. அதுதான் அவர்களுக்கு இளப்பமாயிருக்கிறது. இந்த கொட்டு மலடு உதவாக்கரைப்பிண்டம் என்றெல்லாம் என்னை ஏசுகிறார்களாம். உன் அத்திம்பேருக்கும் அதைப்பற்றித் துளிகூட கவலையில்லை. அம்மா சொல்லியனுப்பிய எந்த காரியத்தையும் செய்யக்கூடாதென்கிற சட்டம் வேறு விதித்திருக்கிறார். கடவுளை நம்பினால் கட்டாயம் சகலமும் கைகூடுமாம். இப்படியொரு வேதாந்தத்தைப் பேசிக்கொண்டு என்னை வதைக்கிறார். கடவுளை நம்பாமலா வ்ரதாதிகளை அனுஷ்டிக்கிறோம். நம்பிக்கை நம்பிக்கை என்று கூறும் போது எனக்கு எரிச்சலாக வருகிறது. நம்பிக்கை இல்லாவிட்டால் தோல்விதான் உண்டாகும். நம்பிக்கைப் பாலத்தின் மீது கடமையைத் துணைகொண்டு நடந்தால் லட்சியஸித்தியைப் பெற்றுவிடலாமாம். என்ன நம்பிக்கையோ! பாலமோ! எனக்கு ஒன்றுமே கட்டோடுபிடிக்கவில்லை. நாகதோஷமும் சுமங்கலிப் பெண்டுகள் தோஷமும் இருக்கையில் அவைகளுக்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்யாமல் தோஷம் எப்படி விலகிப்போகும்? வ்யாதிக்குத் தகுந்த மருந்தை சாப்பிடாமல் வ்யாதி எப்படி குணமாகும்? அப்படித்தானே இதுவும்...இதோ பாரு ஸரோஜா! அத்திம்பேர் ஏதாவது சொன்னாலும் நீ அதை லட்சியம் செய்யாதே. எனக்காகப் பொறுத்துக்கொள்ளு. ஆசைப்பட்டு வந்ததற்கு நீ சந்தோஷமாயிருந்துவிட்டுப்போகலாம். இங்கு எனக்குத் தெரிந்த ஒரு மாமி இருக்கிறாள். அவளுடன் உன்னை அனுப்பி பட்டிணத்தில் பார்க்கவேண்டிய இடங்களுக்கு அழைத்துப்போகும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன்; கவலைப்படாதே." என்று கூறி அவளை த்ருப்திசெய்தாள். சிறுமியாதலால் அவள் உள்ளம் ஒரே வியப்புடன் இருந்தது.

6

சகோதரிகள் இருவரும் பேசிக்குலாவிய பிறகு ஸரோஜா ஸ்நானத்திற்காக இறங்கிவந்தாள். அப்போதுதான் அச்சுதன் வெளியில் சென்று காய்கறிகள், பழங்கள் வாங்கிக் கொண்டு வந்தான். ஸரோஜாவை இவன் பார்த்து வெகு நாட்களாகிவிட்டதால் முதலில் அடையாளமே தெரியவில்லை.

ஸரோஜாவுக்கு இவனைப்பார்த்த உடனே அடையாளம் தெரிந்துவிட்டதால் முதலில் சடக்கென்று தூக்கி வாரிப் போட்டது. தன்னைப்பார்த்ததும் என்ன சொல்லிவிடுவாரோ என்கிற பயத்துடன் சடக்கென்று வெந்நீர் அரைக்கு ஓடி விட்டாள்.

யாரது புதியமுகம்? என்று தனக்குள் எண்ணியவாறு காய் கறிகளைக் கொடுத்துவிட்டு ராஜி படுத்துள்ள அரைக்குச் சென்றான். ராஜியைப் பார்த்ததும் இவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அருகில் சென்று தொட்டுப்பார்த்து...ராஜீ! ஏனம்மா! கண்ணீர் விடுகிறாய்?... என்னம்மா உடம்பு?... டாக்டரைக் கூப்பிடட்டுமா? ஜுரம் காய்வதுபோல் உடம்பு சுடுகிறதே...என்று மிகவும் கனிந்த அன்புடன் கேட்டான்.

ராஜி:—அண்ணா! என்னுடைய முட்டாள் தனத்தினால் நீ இத்தனை கஷ்டப்படுகிறாய் என்பதை நினைக்க வருத்த மாயிருக்கிறது. அண்ணா! நீ கோபிக்காதே. நான் எப்படி யாவது இன்று ஊருக்குப்போய்விடுகிறேன். என் கணவரிடம் நான் போய்ச்சேர்ந்துவிட்டால் எனக்குஉடம்பு சரியாகிவிடும். ஏதோ அசட்டுத்தனமாக நான் நடந்துகொண்டதைக் காண வருத்தமாயிருக்கிறது. கடவுள் எனக்காவது ஏராளமான பொருளைக் கொடுத்திருந்தால் லட்சியமில்லாமல் நான் செலவு செய்து வந்த காரியத்தை முடித்துக்கொண்டு போகலாம். உன்னுடைய சொல்ப வருவாயில் அதிக செலவுக்கு என் குடும்பமும் சேர்ந்தால் எப்படி ஜெயிப்பது என்கிற ஏக்கமே என்னை வாட்டுகிறது. அன்புக்கு அடிமையாகி நான் வந்து விட்டேன். ஆனால், அன்பற்றபாலைவனவாழ்க்கையில் நீ எதிர் பார்க்கும் மனோரதம் சூனியமாகி அதனால் ஏதாவது ஏடா கூடம் நேர்ந்துவிடுமோ? உன் மனம் நொந்து பின்னும் வாழ்க் கையில் துன்பம் தேங்கிவிடுமோ? என்று பயப்படுகிறேன். அதனாலேயே எனக்கு ஜுரம் வேறு காய்கிறது. நீ உன் சகோதரியை அவள் சம்மதமின்றி அழைத்துவந்ததனால் அதற்குப்போட்டியாக மன்னி தன் சகோதரியையும் மற்றொரு சகோதரியின் குழந்தைகளையும் வரவழைத்திருக்கிறாள்...

என்பதைக் கேட்டதும். "என்ன! என்ன! அவள் சகோதரி வந்திருக்கிறாளா?"...என்று ஆத்திரத்துடன் கேட்ட படபடப்பைக் கண்ட ராஜி சடக்கென்று அண்ணனின் கை யைப் பிடித்துக்கொண்டு "அண்ணா! ஆத்திரப்படாதே! ஆத்திரத்தினால் செய்துவிட்ட எந்த காரியமும் சிதறிவிடுமே யன்றி சிறப்புறாது. இதை உலகம் நன்கறிந்ததாகும். அவளையும் நீ சரியானபடி நடத்தாது பிறந்தகத்திற்கே அனுப் பாமல் கட்டுப்படுத்திவிட்டு நீமட்டும் உன்தங்கையை அழைத்து வந்து குலாவுவது எந்த தர்ம நியாயம்? அதனால்தான் அவளுடைய தங்கையை அழைத்துவந்திருக்கிறாள். இனி

உனக்குச்செலவுக்கோ, இந்தஇரண்டு குடும்பங்களின்குழந்தை களின் சண்டைக்கோ பஞ்சமே இல்லே. அதனுல் சதா அழுகை யும் பெரியவர்களிடம் சண்டையும் அதன் மூலம் மனஸ்தாப விஷம் முற்றி பெரும் விரோதமும் உண்டாகிவிடும். சாதாரண மாய் 'குழந்தைகளின் சண்டை கோர்ட்டுவரை போய்விடும்' என்று சொல்வார்கள். அதன்படி வீணுன வியவகாரங்கள் எதுவுமே நடக்க இடம் கொடுக்க என்மனம் இசையவில்லே.

அண்ணு! இதை வைத்துக்கொண்டு நீ வீணுன கலாட்டா எதுவும் செய்யாதே. குடும்பத்து கண்ணியத்தை குட்டு கோபியமாய்ப் பாதுகாக்கவேண்டிய கடமைகள் பெரும் பாலும் பெண்களேச் சேர்ந்ததாகும். ஆண்களுக்கும் பங்கு உண்டு என்ருலும் முழு பொறுப்பும் பெண்களுக்குத்தான் உரியது. அதனுல்தான் 'ஆவதும் பெண்ணுலே' என்று முத லில் பொறுப்பின் லட்சியத்தை உறுத்திச்சொல்லிப் பின் 'அழி வதும் பெண்ணுலே' என்கிற உண்மையையும்பெரியார் சொல்லி இருக்கிருர்கள். ஆகையால் என் கடமையை நான் செய்தாக வேண்டும். வீணுன மனஸ்தாபமும் செலவும் உனக்குவேண் டாம். இன்று மாலே வண்டியிலேயே என்னே நீயே கொண்டு விட்டுவிட்டு வந்துவிடு. கடவுள் இருக்கையில் கவலேயோ பயமோ இல்லே. அப்படி நான் ஏதாவது அனுபவிக்கவேண்டு மென்றுகடவுள் என்தலேயில்எழுதியிருந்தால் அதை வேண்டா மென்று மறுத்துத் தள்ளவோ அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ நம்மால் என்ன இருக்கிறது? நீ என் விருப்பப் படி செய்யவேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்கும்போது அவள் கண்கள் மடைதிறந்துவிட்டதுபோலாகிவிட்டன.

தான் எப்படி பதில் சொல்லுவது, என்ன செய்வது என்றே தோன்ருமல் அச்சுதன் தவிக்கிருன். தான்வரும் போது ஓடி ஒளிந்த பெண்தான் ஸரஸாவின் சகோதரியாய் இருக்குமோ! ஸரஸாவுக்குத்தான் என்ன துணிச்சல்? என்ன ஸாகஸம்? என்று குழம்பிப்போய் உட்கார்ந்திருக்கையில் லேடீ டாக்டர் ஊசி குத்த வந்தாள். இருவருடைய நிலேமை யையும் பார்த்துஉண்மையில்என்னவோ ஏதோஎன்று பயந்து திடுக்கிட்டுப்போய்''என்னம்மா!ராஜீ! ஏன்கண்ணீர்விடுகிருய்? உடம்புக்கு ஏதாவது...என்று சொல்லியபடியே தொட்டுப் பார்த்தாள்.

ஜுரம் காய்வதையும் உடல்நிலேமை இருப்பதையும் கண்டு முகம் சுளித்தவாறு நாடியைப் பார்த்தாள்...''மிஸ்டர் அச்சு தன்! நீங்கள் என்ன யோசனே செய்கிறீர்கள்?...என்று முடிப் பதற்குள், அச்சுதன்...''ஒன்றுமில்லே டாக்டர்! இன்று உடனே இவள் ஊருக்குப்போகவேண்டுமாம். இராப் பூர தூங்கவில்லே. ...என்று முடிப்பதற்குள், டாக்டர் இடைமறித்து ''மிஸ்டர் அச்சுதன்! நான் ராஜீ வந்ததுமுதல் கவனிக்கிறேன். இங்கு

சரியானபடி வரவேற்பில்லாததால் இத்தகைய மனக்குழப்பம் உண்டாகியிருக்கிறது என்று நான் புரிந்துகொண்டேன். இப்போது இவள் உள்ள நிலைமையில் இன்றோ நாளையோ ப்ரஸவமாகிவிடும்போல் தோன்றுகிறது. ஊருக்குப் போகும் ஆசையை அடியோடு விட்டுவிடவேண்டியதுதான். நான் சொல்வதைக் கேளுங்கள். இன்றே ராஜியை ஆஸ்பத்ரியில் அட்மிட் செய்துவிடுவதுதான் சரியான முறையாகும். இவள் வீட்டிலிருப்பதே சரியில்லை......மிஸ்டர் அச்சுதன்! இப்படி வாருங்கள். இவளுக்குள்ள பலவீனமும் ரத்தமில்லாத வரண்ட நிலைமையும் பார்த்தால், வீட்டில் வைத்துக்கொள்ளுவதில் உபயோகமில்லை. இதை அவள் எதிரில் சொல்லக்கூடாதென்று நான் தனியே சொல்கிறேன். டாக்டர்களின் உதவியும் நர்ஸ்களின் உதவியும் கட்டாயம் தேவை இருப்பதால் இன்றே அனுப்பிவிடுங்கள். வீட்டுக்கவலை இல்லாமலிருக்கட்டும்... நீங்கள் பயந்துவிடவேண்டாம். உயிருக்கு எத்தகைய ஹானியும் இல்லை. எனினும், சரியானபடி கவனிக்காவிட்டால் பலவித கோளாறுகள் உண்டாகி அவஸ்தைப்பட நேரும். ஆகையால் முன்ஜாக்ரதையாயிருப்பதுதான் நல்லது. அதற்காகச் சொல்லுகின்றேன்...இன்றே ஏற்பாடுசெய்துவிடுங்கள்". என்று கூறி, சீட்டு எழுதிக்கொடுத்துவிட்டுப் பின் ஊசிகுத்திவிட்டு "ராஜி! உன்னை இன்றே நான் ஆஸ்பத்ரிக்கு அழைத்துப் போகப்போகிறேன். ஊருக்குப் போகும் ஆசையை விட்டுவிடு; என் வார்த்தையைக் கேளம்மா"......என்று நயமாகக் கூறினாள்.

ராஜி தான் சொல்லவேண்டியதை எத்தனை சொல்லியும் டாக்டர் கேளாமல் ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டுச் சென்றாள். உண்மையில் அச்சுதனுடைய நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. "டாக்டர் சொல்கிறபடி தங்கையை ஆஸ்பத்ரியில் இன்றே விட்டுவிட்டால் வீட்டில் உள்ள கவலையும் அலட்சியத்தின் வருத்தமும் குறையும்; மனநிம்மதி உண்டாகும். நாம் லீவு வாங்கிக்கொண்டிருப்பதால் வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளலாம். எப்படியாவது பெத்துப் பிழைத்து தாயும் சேயும் க்ஷேமமாக இருந்தால் போதும். உடனே அவள் வீட்டில் கொண்டு விட்டுவிடலாம்" என்று எண்ணி முடிவுகட்டினான். எனினும், மனது என்னமோ ஒரு நிலையில் நில்லாமல் தவித்தது.

7

ஸ்ரஸா தன் தங்கையை அழைத்துக்கொண்டு அன்று பூராவும் கோயில் குளம் கடற்கரை முதலிய இடங்களைக் காட்டி இன்புறுவதில் வீட்டையே மறந்தாள். மாலை 7-மணிக்கு

மேல் வீட்டிற்கு வந்தாள். சமயல்காரியின் மூலம் ராஜி ஆஸ்பத்ரிக்குச்சென்றதைஅறிந்து, "அபாடா! நல்ல காரியமா யிற்று! பிள்ளை பெருதவள் கொட்டு, மலடு குழந்தையைக் கண்ணுல் பார்த்தாள் என்று சொல்லஇடமில்லாதுபோனது, மிகமிக சந்தோஷம்." என்று எண்ணினுள்.

ஆனுல், இவளுடன் கூடப்பிறந்தவளாயினும் ஸரோ ஜாவின் போக்கும் உணர்ச்சியும் மாறுபட்டதாகவே இருந் தது. தன் அக்கா சொல்லிய வார்த்தைகளை அவள் ஆமோ திக்கவில்லை. "ஏன் அக்கா இப்படிச் சொல்கிருய்? உன்கணவர் பொறுப்பு ஏந்திக்கொண்டு வந்தபிறகு அவள் க்ஷேமமாக இருந்து குழந்தையுடன் ஊருக்குப்போனுல்தானே உனக்குப் பெருமையும் நல்ல பெயரும் கிடைக்கும். உன் நாத்தனுர் வாயினுல் மலடி என்று சொன்னுளா? வீணுக ஏன் நீயே கவனம் செய்கிருய்?" என்று சிறுமியானுலும் சடக்கென்று கேட்டதானது ஸரஸாவையே திடுக்கிடச்செய்தது. ஆனுல், அதற்கு எத்தகைய பதிலும் சொல்லாமல் போய்விட்டாள்.

ஸரோஜாமட்டும் சமயல்கார செவிடியிடம் "ஏம்பாட்டி! ராஜிக்கு உடம்பு சரியில்லையா?" என்று கேட்டாள். அதே சமயம் அச்சுதன் ராஜியின் குழந்தைகளுடன் வந்தான். ஒரு குழந்தை தோள்மீது தூங்கிவிட்டது. மற்றென்று காலைக் கட்டிக்கொண்டு அழுகிறது. இந்நிலைமையில் வரும் அச்சு தனின் முகத்தில் கவலையும் சோகமுந்தான் குடிகொண் டிருந்தன.

அதைப் பார்த்த ஸரோஜாவுக்கு அவளையறியாது பச் சாத்தாபமும் ஒருவித இரக்கமும் உண்டாகியதால் அன்று காலையில் ஓடி ஒளிந்ததுபோல் ஒளியாமல், "அத்திம்பேரே! சவுக்யமா?" என்று தானே கேட்டவாறு தூங்கும் குழந் தையைத் தானே பாயைப்போட்டு அதில் வாங்கிவிட்டது மன்னியில் தூங்காத குழந்தைகளுக்குத் தானே ஆகாரத் தைக் கலந்து ஊட்டியவாறு "என்ன அத்திம்பேரே!...... யோசனை செய்கிறீர்கள்; என்மீதுகூட கோபமா?' என்றுள்.

ஸரோஜாவின் விசாரிப்பும் பரபரப்பும் அன்புடன் முன் பின் அறியாத குழந்தைகளுக்கு ஆகாரம் ஊட்டும் தன்மை யும் காண இவளா ஸரஸாவின் சகோதரி! ஒருவேளை ஸரோ ஜாவாக இருக்குமோ? அன்று மிக சிறுமியாயிருந்தவள் இன்று பெரியவளாகிவிட்டதால் அடையாளமே புரியவில் லையே... தானே பேசும்போது நாம்ஏன் விரோதத்தைக்காட்ட வேணும்? இவளுக்கும் அந்த விரோதத்திற்கும் ஸம்மந்தம் என்ன? வீடேறிவந்த ராஜியை ஸரஸா வரவேற்றுப்பேசா ததைக்குற்றமாக மதிக்கும் நான் இவளாக நம் வீடேறிவந்து பேசுகையில் நாம் பேசாதிருப்பது அழகல்ல...என்று தனக்கே

தோன்றியதால்...சிறிது சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "யோசிக்கத்தான் செய்கிறேன்; நீ அம்புஜாவா?...ஸரோஜாவா? என்கிற சந்தேகம் வந்துவிட்டது!—எப்போது வந்தாய்?" என்றான்.

ஸரோ:—ஆமாம்! சந்தேகம் பிறக்கக்கூடிய அளவுக்கு நாம் பிரிந்தோமல்லவா? மனிதர்களை மறந்துகூட போயிருக்கலாம்; இது சகஜந்தானே! நான் ஸரோஜாதான்—என்றுசொல்லும்போது ராஜியின் கணவர் ஊரிலிருந்துவந்தார். வந்ததும் வாராததும், "ராஜி எங்கே? சவுக்யமாயிருக்கிறாளா?" என்று பதைத்தவாறு கேட்டார்.

ஸரோஜா இனி நிற்கக்கூடாதென்று மாடிக்குப் போய்விட்டாள். அப்போது ஸரஸா, தங்கை ஊரிலிருந்து கொண்டு வந்த பெட்டிகள், பைகள் முதலியவைகளைச் சாவகாசமாய்த் திறந்து பார்த்துக்கொண்டிருந்ததால் ஸரோஜா கீழே தன் கணவனிடம் பேசியதோ, ராஜியின் கணவன் வந்திருப்பதோ, ஒன்றுமே தெரியாது. ஒரு பெட்டியைத் திறந்த ஸரஸா அதிலிருப்பதைப் பார்த்துவிட்டு, "இதென்ன ஸரோஜா! அடுக்கடுக்காய் டைரியும், நோட்டுப் புத்தகமும்? இதேது?" என்றாள்.

தன் அத்திம்பேர் தன்னுடன் பேசிவிட்டார் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள வந்த ஸரோஜா இதைப் பார்த்ததும் அதை அறவே மறந்துபோய்..."ஐயையோ! பெட்டி மாறாடி இருக்கிறதே! ஓரேமாதிரி பெட்டி, ஓரே அளவு, ஓரேகலர்; எல்லாம் ஒன்றாய் இருந்ததால் நான்தான் ஏமார்ந்தேனோ? அல்லது எனக்குமுன் இறங்கிய யாராவது ஏமார்ந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்களோ? தெரியவில்லையே! ஐயோ பாவமே! இது யாருடையதோ தினக்குறிப்புடைரிகள் போலிருக்கிறதே"...என்று ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தாள்.

வருஷவாரியாக இருந்ததுடன் பின்னும் சில நோட்டுப் புத்தகங்களும் காணப்பட்டது கண்டு ஸரஸா மிகுந்த வியப்புடன் "இதென்ன அஜாக்ரதை? நீ பெட்டியில் என்ன வைத்திருந்தாய்?"...என்று ஆவலுடன்கேட்டாள்.

ஸரோ:—நானா? வேப்பம்பூ, சுண்டக்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல், மாகாளிக் கிழங்கு ஊருகாய், குடமிளகாய் வத்தல், கறிவடாம், அப்பளாம், அவல் முதலியவைகளை டப்பாக்களில்போட்டு அம்மா உனக்காக அனுப்பினாள். அவைகள் யாரிடம்போய் சரணாகதி செய்கின்றனவோ!...

ஸரஸா:—நன்றாய்ச் சிரித்தாய் போ! இவைகளை நான் சாப்பிட்டு எத்தனைகாலமாயிற்று தெரியுமா? எனக்கு இஷ்டமானவைகளை இப்படித் தொலைத்துவிட்டாயே? இவைகள் எந்த பேப்பர்கடைக்காரன் கொண்டுவந்ததோ உதவாக்கரையான

தால் போட்டுவிட்டுப் போய்விட்டான். இப்போது என்ன செய்வது?''—என்று தங்கைமீது கோபித்தபடியே தனக்கு மிகவும் இஷ்டமான பண்டங்களை எண்ணி நாக்கில் ஜலம் ஊற ஊற...அந்த உணர்ச்சியுடன் குறிப்புப் புத்தகம் ஒன்றைப் பிரித்துப் பார்த்தாள்.

முத்துக்கோத்ததுபோன்ற அழகான எழுத்தில் புத்தகம் பூராவும் எழுதியிருக்கததுகண்டு ''என்ன அழகான கை எழுத்து! பேரும்தெரியவில்லைஊரும்தெரியவில்லையே!'' என்று எண்ணியபடியே நடுவில் உள்ள ஒரு பக்கத்தைப் படித்தாள்.

* * * *

மாதம்...தேதி...

'என்னைவிட சிறந்த பாக்யசாலி உலகிலேயே இல்லை?' என்று யார் நினைக்கிறார்களோ அந்தசினைப்பேவெகுவிரைவில் 'என்னைவிட கஷ்டப்படுகிறவர்கள் உலகிலேயே இல்லை?' என்று நினைக்கும்படியான நிலையைக் கொடுத்துவிடுகிறது! இது தான் உலகம் கண்டறிந்த உண்மை...என்று என் தாய் ப்ரதி தினமும் சொல்வதை நான் விளையாட்டாக எண்ணியதற்குப் பலன் இப்போது உணர்ந்துவிட்டேன். பெரியவர்களின் அனுபவ வாக்குமட்டும் சாமான்யமல்ல! மந்திரசக்தி வாய்ந்த மணிவாக்குதான் அது...என்ற உணர்ச்சி எனக்கு இப்போது தோன்றுகிறது. இது நிலைத்திருந்தால் போதும்.

* * * *

தேதி...மாதம்...

இன்று எதனாலோ மனது கலங்கித் தவிக்கின்றது. காரணமேதெரியவில்லை.வீட்டில் சகல சம்பத்திலும் த்ருப்தியாகத் தானிருக்கிறது. கவலைக்குக் காரணம் எது? வீதியோடு சென்ற ஒரு துக்ககரமான சாவின்—பிண ஊர்வலத்தின்- பரிபவந்தான் இருக்குமென்று நானே தீர்மானிக்கிறேன். மனைவி மிகவும் கணவனை அலட்சியம் செய்து அவமதித்ததால் அவன் அந்த மின்ஸாரத்தாக்குதலைச் சகிக்காமல் தற்கொலை செய்துகொண்டு இறந்ததாகத் தெரிகிறது. அலட்சியம் செய்த மனைவி வாரிக்கொள்ளும் லாபமென்ன? ''என் கணவர் என்னை சிறையில் வைத்திருப்பதுபோல் நடத்தினர். ஆனால் நான் தற்கொலை செய்துகொள்வேனா? அவர் என் ஸ்வாமி. நான் அவர் சொத்து. அவர் என்னை எது செய்தாலும் உலகத்திற்குத் தெரியாது. நான் தற்கொலை புரிந்துகொண்டால் அதனால் அவருக்குத்தானே பெருந்துன்பமும் அபவாதமும் உண்டாகும். ஏழு தலைமுறைக்கும் அந்த பாவம் என்னைத் தானே சேரும். அதனால் பொறுக்கிறேன். பொறுமைக்கு ப்ரத்யட்ச தெய்வம் பூமிதேவியல்லவா?...அவள் இனத்தில் பிறந்தாம் அதைஉணர்ந்து பின்பற்றவேண்டாமா?'' என்று என் சினேகிதை விசாலி சொல்லிய வார்த்தைகள் இப்போது

நினைவுக்கு வருகிறது. அவள் பொறுமை அவளுக்குப் பெரும் வெற்றியை அளித்தது. எனக்கும் அத்தகைய பொறுமையை பகவான் கொடுத்தால்போதும்.

* * * *

மாதம்... தேதி...

எதிர்வீட்டில் புதிய குடிவந்துள்ள தம்பதிகளைக் காண பரமசந்தோஷமாயிருக்கிறது. இதே வீட்டில் இதற்குமுன் இருந்த தம்பதிகள் எலியும் பூனையும்போல் வாழ்க்கை நடத்தியதின் விபரீதம் கணவன் மனம் கசந்து உயிருக்கும் துணிந்து பட்டாளத்தில் சேர்ந்துவிட்டான். மனைவியின் ஒண்டிக்கட்டை வாழ்க்கையில் பிறந்தவீட்டில் அடிமைபோல் இளப்பமான வாழ்க்கைவாழ்ந்து அழுதுசாகிறுள். முதலிலேயே புத்தியுடன் இருந்திருந்தால் அந்த கதி வருமா? இந்த தம்பதிகளாவது இந்த க்ரகதோஷத்திற்கு ஆளாகாமல் நன்றாக இருக்கவேண்டும். அன்பு நிறைந்த அன்யோன்ய தாம்பத்யவாழ்க்கைக்குள்ள மதிப்பும் இனிப்பும் பெருமையும் மற்ற எந்த வாழ்க்கைக்கு உண்டு! தம்பதிகள் நீடூழிவாழ்க!..

* * * *

மாதம்... தேதி...

இன்று என் சிறிய மாமியார் வந்திருந்தார். மனுஷி என்னவோ நல்லவர்தான். அவர் தனது மைத்துனர் ஓர்ப்படியின்மீது என்றோ ஆதியில் கொண்ட விரோதத்தை இன்னும் மறக்காமல் வைத்துப் பாராட்டிப் பேசுவது மிகவும் வெறுப்பாயிருக்கிறது.விரோதத்தை மனிதர்கள் வளர்ப்பது எத்தனை பயங்கரமானது? வ்யாதிகளை நாம் வளர்ப்போமா? எந்த சிறிய தலைவலியாயினும் உடனே மருந்தினால் அகற்ற முற்படுகிறோம். அதிலும் கொடிய வ்யாதிகள், ஒட்டுவாரொட்டி வ்யாதிகள் முதலியவைகளைக் கண்டாலே பயப்படுகிறோம். அதுபோலல்லவா விரோதத்தையும் கண்டு பயந்து அதை வேரறுக்கவேண்டும். விரோதத்தை வேரறுக்கும் அஸ்திரம் பொறுமை,சகிப்புத்தன்மை,அன்பு...முதலியவைகளேயாகும். வ்யாதி வளர்ந்தால் அது பிடித்துள்ள மனிதர்களை மட்டும் கொல்லுகிறது. விரோதம் வளர்ந்தால் தலைமுறைதலைமுறையாய்க்குடும்பத்தையும் குடும்பத்தைச்சார்ந்தவர்களையுமல்லவா கொன்றுவிடும்—அல்லது வடுவை உண்டாக்கி விகாரப்படுத்திவிடும். விரோதம் என்பது உண்மையில் வந்தாலும் அதைத் துலைத்துச் சமரஸப்படுத்துவதன்றோ சாமர்த்தியம். நான் சிறியவளானுலும் இதையே என் மாமியாருக்குச் சொல்லிவிட்டேன். அவர் என்னை அதிகப்ரஸங்கி என்று நினைப்பார். நினைத்தால் நினைக்கட்டுமே. வழிதவறுகிறவர்கள் யாரானுல் என்ன? சொல்வதில் குற்றமா?

என்றதைப் படித்ததும் ஸரஸாவுக்கு ஏதோ ஒருமாதிரி உணர்ச்சி உண்டாகியது. நானும் இப்போது வீண் விரோதத்தையல்லவா வளர்க்கிறேன்...என் கணவரும் வீண்விரோதத்தையல்லவா என் பிறந்த வீட்டினரிடம் காட்டுகிருர்... விரோதம் அத்தகைய கொடிய பாதகமா?...பயங்கர வ்யாதிக்கு ஒப்பானதா?...என்று மனத்தில் நினைத்துத் தம்பித்திருக்கையில் ஸரோஜாவும் ஒரு புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாள். அதில்,

அன்பை இழப்பது வெகு சுலபம். மறுபடியும் அன்பைப் பெறுவது வெகு கஷ்டம். அன்பைக்கொண்டு அன்பைப்பெறவேண்டுமேயன்றிபகைமையைக்கொண்டு அன்பைப் பெறமுடியாது. கொள்ளைக்காரன் மிரட்டி உருட்டி பயத்தைக் காட்டிக் காசுபறிப்பதுபோல்தான் மிரட்டலில் உறவுகொண்டாடுவதாகும். குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்கிற பழமொழியை மக்கள் மறக்கக்கூடாது. சாக்ஷாத் பகவானிடமே பல குற்றங்களைக் கண்டுபிடிக்கையில் சாதாரணப் புழுவுக்குச் சமானமான மனிதர்களிடம் குற்றத்தைத் தவிர வேறு எதையும் காணவே முடியாது. அந்த குற்றத்திற்குள் புகுந்து அலசிப் பார்த்து மற்றதை விலக்கிவிட்டு நிதானமானவற்றைக் குணமாகக்கொள்வதுதான் மக்கள் செய்ய வேண்டிய கடமையாகும். இவர்கள் மனத்தில் உள்ள கல்மஷத்தின் வேகம் பிறர் எதுசொன்னாலும் செய்தாலும் தன்னைப் பார்த்துச் சொல்லியதாகவே தோன்றும். உதாரணமாக, கணவன்மனைவிக்குள் மனஸ்தாபமிருந்தால் இருவர் மனத்திலும் விகல்பமே தோன்றுவதுடன் அவர்களைச் சார்ந்த மனிதர்கள்மீதும் கோபப்பட்டு அவர்களையும் த்வேஷித்துக் கொண்டு த்வேஷம் என்கிற அந்தகாரத்திலேயே வாழ்நாள் கழிந்துவிட்டால் பிறகு எதை எண்ணித்தான் என்னபயன்? நாம் வயதில் பெரியவர்கள் ஆகஆக ஏதோ ப்ரமாதமாய் வெற்றியைக் கண்டுவிட்டதாக எண்ணுகிறோம்; எண்ணி மகிழ்கிறோம். அந்த மகிழ்ச்சி வெறும் நீர்மேல் குமிழிபோன்றது என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது...

நம் வாழ்நாளில் ஒருநிமிஷம் கழியும்போதும் நாம் இறந்துகொண்டே வருகிறோம் என்கிற உயர்ந்த தத்துவத்தை நன்ருக உணரவேண்டும். நிமிடத்திற்கு நிமிடம் நாம் மடிந்துபோகிறதை உணர்ந்து இனி இருக்கும் காலத்திலாவது சரியானபடி கடமையைச்செய்து அன்பைஅள்ளிவீசி ஆனந்தவாழ்க்கை நடத்துவதுதான் மக்களின் கடமையாகும்.

என்ற ஒரு கட்டுரையை மனத்திற்குள்ளேயே படிக்கும் ஸரோஜா சிறியவளாக இருப்பினும் இந்த உயர்ந்த கருத்துகள் நிறைந்துள்ள தத்துவ லட்சியத்தை அவள் உள்ளமிருந்த ஆர்வத்துடன் உணர்ந்து உணர்ச்சிவயப்பட்டது.

உடனே இதைத் தன் சகோதரிக்குப் படித்துக்காட்ட எண்ணித்திரும்பிப்பார்க்கையில் அவள் ஒரு புத்தகத்தில் லயித்திருப்பதைக்கண்டு, "அக்கா!...இதோ இந்த நோட்டுப் புத்தகத்தில் ஒரு கட்டுரை இருக்கிறது பாரு. இதைப் படிக்க எனக்கு ஆச்சரியமாயும் ஆனந்தமாயும் இருக்கிறது தெரியுமா? ஐயோ பாவம்! எந்த எழுத்தாளனோ எழுதி பெட்டியில் வைத்திருக்கிறான். மறந்துவிட்டான்......நீ எதைப் படிக்கிறாய்?...இதோ இந்த வ்யாஸத்தைப் படி" என்றுதான் படித்த நோட்டுப் புத்தகத்தை அவளிடம் கொடுத்தாள்.

அதிகம் சொல்வானேன்? சகோதரிகள் இருவரும் அந்த தினக்குறிப்புப் புத்தகங்களில் சிலவற்றையும் இதர நோட்டுப் புத்தகங்களில் இருப்பவற்றையும் படித்துப்படித்து அவர்களுக்கு ஒரு புதிய உணர்ச்சியும் புதிய எண்ணங்களும் உண்டாயின.

அதே சமயம் ஆஸ்பத்ரியிலிருந்து ஒரு ஆள்வந்து "திடீரென்று அம்மாளுக்கு உடம்பு அதிகமாகிவிட்டதாம்; டாக்டரம்மா தெரிவித்து அழைத்துவரச்சொன்னார்கள்" என்று சொன்னதைக் கேட்டதும் அச்சுதன் நடுங்கிப்போய் அலறிவிட்டான். ராஜியின் கணவனுக்கு ஒன்றுமே தோன்றாமல் மயக்கம் போட்டதுபோலாகிவிட்டது.

கீழே நடக்கும் சந்தடியை மாடியிலிருந்து கவனித்த ஸரஸாவுக்கு அப்போதுதான் குறிப்புகளையும்வ்யாஸத்தையும் படித்துக் கலங்கியிருந்த மனது அவளையறியாது உணர்ச்சி மேலிட்டால் சடக்கென்றுமாறியது. தன்னுயிராக பாவித்துத் தன் கணவன் அழைத்துவந்த சகோதரியை இப்படிப் புண்படச் செய்துவிட்டோமே. ஒருவேளை அவள் பிழைக்காவிட்டால் வீண் அபவாதமல்லவா வரும். அதனால் கணவனின் மனது எப்படியாகுமோ? என்கிற தத்துவஞானம் எப்படியோ சடக்கென்று உண்டாகியது? தடதடவென்று கீழேவந்தாள். "ஸரோஜா! குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளு. இதோ வருகிறேன்"...என்று கூறிவிட்டுவெகுவிரைவில்ஆஸ்பத்ரிக்குச் சென்றாள். நல்ல கெட்டிக்காரியாகையால் வெகு சுறுசுறுப்புடன் ராஜி படுத்துள்ள இடத்திற்கு வந்து பார்த்தாள். ஜுரம் அதிகமாகிவிட்டதால் தலையில் ஐஸ் வைத்திருக்கிறது! அதோடு சீக்கிரத்தில் ப்ரஸவிக்கும் சந்தர்ப்பமும் நெருங்கிவிட்டதால் அவள் தன்னினைவற்று "ஐயோ! நான் ஏன் அண்ணன் வீட்டிற்குவந்து அந்த தம்பதிகளின் வாழ்வைப் பிளவு செய்யவேண்டும்? இது பாபமல்லவா?" என்று இதையே எண்ணி ஏங்கித் தவிக்கையில், "அக்கா!" என்று அன்பை அள்ளிக் கொட்டியவாறு அவள் முகத்தோடு முகம்பதித்து "உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள்.

ஆனந்தக் கண்ணீர் சுரந்து வழிகிறது. ராஜியின் நிலைமைக்குக் கேட்கவேண்டுமா?...“ஹா...மன்னி !...என் மன்னி ஸரஸ்வதியா?...உண்மையாகவா?...அண்ணா எங்கே? மன்னி! என்மீது...என்று ஆரம்பிக்கும்போதே, ஸரஸா......“அக்கா! ஒருவர்மீதும் குற்றம் இல்லை. என் முட்டாள்தனத்தின் வேகம்...பொருமையின் வேகம்...இப்படி எல்லாம் நடந்துவிட்டது. என்னாலேயேதான் நானுங்கெட்டு உங்களையும் கஷ்டப்படுத்தி உங்கள் அண்ணாவிடமும் அபசாரப்பட்டுவிட்டேன். என் புத்தியை மறைத்த மேகத்தை யாரோ ஒரு மகானுபாவன் சூர்யப்ரகாசம்போன்ற எழுத்துக்களினால் விலக்கிவிட்டார். நான் அன்பின் வலிமையை அறிந்தேன். உங்களுடைய அன்புக்கும் பாத்திரமானேன். இனி பழைய விஷயங்களை அடியோடு மறந்துவிடுங்கள். மத்தியில் இரண்டுநாட்கள் ஏதோ சனி போதாத வேளையாக இருந்து வாட்டிவிட்டது” என்று கனிந்த அன்புடன் கூறி அவளைக் கட்டிக்கொண்டாள்.

அதே சமயம் ஓட்டமாக அச்சுதனும் ராஜியின் கணவனும், ஸரோஜாவும் ஓடிவந்தார்கள். இங்குள்ள காட்சியைக் கண்ட அச்சுதன் தன் கண்களையே தான் நம்பாமல் வியப்புக் கடலாடினான். “ஸரஸாவா?” என்று அலைமோதும் உணர்ச்சியுடன் கேட்டான்.

ஸரோஜா சிரித்தபடியே “அத்திம்பேரே ! இனி பகை என்கிற பனி விலகிவிட்டதல்லவா? நீங்கள்கூட அதை அடியோடு விட்டுவிடவேண்டும். எங்கப்பாவும் அம்மாவும் எத்தனை விசனப்படுகிறார்கள் தெரியுமா?...எங்க அக்காவின் அறியாமையை நான் கேள்விப்பட்டு அதைப் போக்குவதற்காகவே யாரோ எழுதியதுபோல் சில தினக்குறிப்பு டைரிகள் சில வ்யாஸங்கள் வரைந்த நோட்டுப்புத்தகம் முதலியவைகளை நானே சேகரித்து எடுத்துவந்து அவளுக்கு முதலில் உணவுப் பண்டங்கள் கொண்டுவந்ததாயும் அது கெட்டுப்போய்விட்டதாயும் ஏமாற்றத்தை உண்டாக்கினேன்; தோல்விக்குப் பதில் வெற்றிப்பரிசாக இதை யளித்துக் கடவுள் ரட்சித்தார்! இனி பகை என்பதே யாருக்கும் கூடாது” என்று குட்டி ப்ரஸங்கத்தை ஆஸ்பத்ரி என்பதைக்கூடப்பாராமல் ஆரம்பித்தாள்.

இதைக்கேட்ட அச்சுதனின் ஆனந்தத்திற்கும ஆச்சரியத்திற்கும் எல்லையே இல்லாதுபோயிற்று. கேவலம் ஒரு சிறிய விஷயத்தில் ஆரம்பித்த உதவாக்கரை சமாசாரம் எத்தனை தூரம போய் எப்படி எல்லாம் வாழ்வைச் சுழற்றிவிட்டது....என்று எண்ணிஎண்ணி வியப்புற்றான். ராஜி கணவனைப் பார்த்ததைவிட அதிக சந்தோஷத்துடன் ஸரஸாவையே பார்த்துப் பூரித்தாள்.

இனி கேட்கவேண்டுமா? ஒரே பள்ளத்தாக்கில் எல்லோருடைய அன்பும் தேங்கிவிட்டதைப் பின்னும் வலுவுடன்

நிற்கச்செய்வதுபோல் அன்றிரவே ராஜிக்கு ஆண்குழந்தை பிறந்து ஸரஸாவின் மடியிலேயே கம்பீரமாக அரசாட்சி செய்தது! இத்தனை அன்யோன்ய பாவத்தையும், பிரிந்து சிதறிய ப்ரேமையையும் சேர்த்துவைத்த ஸரோஜாவை ராஜி தன் உயிராக மதித்து நேசித்தாள். "ஸரோஜா! இந்த குடும்பத்தில் உண்டாகிய அல்ப விஷயத்தின் அனர்த்தத்தை நீ உன் சாதுர்ய புத்தியாலும், உத்தம குணத்தினாலும் சேர்த்துவைத்ததற்காக உன் காரிய வெற்றிக்குத்தக்க பரிசுஒன்று வழங்கப்போகிறேன். அதாவது என்னுடைய மகனுக்குச் சமானமாயுள்ள எனது குட்டிமைத்துனனையே உன் வாழ்க்கைத்துணைவனாக பரிசளிக்க நானும் என்கணவரும் தீர்மானித்துவிட்டோம்!...என்ன? சரியான வெற்றிப் பரிசுதானே? கத்திமுனையைவிட சிறப்பும் வலிமையும் பெற்றது பேனாமுனையாகும். அந்த உண்மையை நீ திறம்படக் காட்டிவிட்டாய். உலகில் சகல பெண்களும் இப்படி இருந்தால் குடும்பத்தில் பிளவு என்பது வருமா?" என்றுகூறி ஸரோஜாவைக் கட்டித்தழுவி முத்தமிட்டாள். இந்தவார்த்தைகளைக்கேட்டும் இச்செய்கையைப் பார்த்தும் ஸரஸாவின் உள்ளம் பூரித்தது. இதைவிட நித்யகல்யாணமங்களவைபவ சுகம் அச்சுதனுக்கு வேறென்னவேண்டும் என்று தோன்றியது. பிரிந்த குடும்பங்கள் மீண்டும்கூடி தேனும் பாலும்போல் இனிப்புடன் ப்ரகாசித்தன. ஸரோஜாவின் வெற்றிப்பரிசுக்கு அவள் இதயக்கோயிலில் இடங்கொடுத்து அவள் உள்ளம் புலகிதமுற்றுப் பூரித்தது. மங்களம். சுபம்.

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதயம்

ரூ. 3-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ ப[illegible]ர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வ[illegible]ணம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை

ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்

[illegible]
பட[illegible]
அ[illegible]

ரூ. 1.
[illegible]ரவஸந்தா
[illegible]ளின்சேகரன்

மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சு[illegible]ர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி

அணா. 8
[illegible]
[illegible]
ஸௌபாக்ய[illegible]
ப்ரபஞ்சலீலை

அணா. 6.
உடைந்த இதயம்

மகாத்மாஜி ஸேவா சங்கம்

29-10-50-ந் தேதியன்று சங்கம் செய்த தரும கைங்கர்யமாவது: தேவகி, ராஜம் என்கிற இரண்டு ஏழைச் சிறுமிகள் இந்து ஸேவாசங்கத்தில் இலவசமாகப் படிக்கிறார்கள்; அவர்களுக்கான புத்தகங்கள், நோட்டுகள் வாங்கி அன்பளிப்பாக அளித்தது.

விசேஷ குதூகல நிகழ்ச்சி—லக்கி டிப்.

நவம்பர் 3, 4 இரண்டு தேதிகளிலும் சங்கத்தில் சிறுவர்கள், பெரியவர்கள், மத்திய வயதினர்கள் ஆக எல்லோருக்கும் தனித் தனியே லக்கி டிப் அதிர்ஷ்டப் பரிசு விளையாட்டுகள் நடந்தன. அந்த உத்ஸாகமும் ஆனந்தமும் எழுதிமுடியாது. அனுபவித்து இன்புற்றால்தான் தெரியும். பெரிய கல்யாண வீடுகளில்கூட இத்தகைய கும்மாளமும் ஆனந்தமும் காணமுடியாது. அத்தனை சிறப்பாகவும் மிகவும் வெற்றிகரமாகவும் நடந்தது. இத்தகைய சிறந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு சாமான்கள் வாங்க ஸ்ரீமதிகள் M. O. ஜானகியம்மாள், டாக்டர் V. C. அங்குளி, M. C. ஜானகியம்மாள், V. M. கோதைநாயகியம்மாள், G. R. ஜெயலக்ஷ்மி, C. ஸரஸ்வதிபாய் முதலியோர்கள் பாதிக்குமேல் பண உதவி செய்தார்கள். மற்றதைச் சங்கம் ஏற்று நடத்தியது. இந்த நிகழ்ச்சி சிறப்புற்றதற்கு டாக்டர் அங்குளி மிகவும் அன்புடனும் ஆர்வத்துடனும் பலவித உதவியும் செய்தது குறிப்பிடத் தக்கது. இதைத் தவிர M. O. ஜானகியம்மாளும் அவர்களுடைய நாட்டுப்பெண்களாகிய M. O. அலமேலு, M. O. அமலாகிருஷ்ண ஸ்வாமி, M. O. கமலா ஸ்ரீனிவாஸன் முதலியவர்கள் தாமே கையினால் வேலைசெய்த பைகள், மணிபர்ஸ்கள், சொக்காய்கள், கவுன்கள், ஜாக்கெட்டுகள், கைகுட்டைகள் முதலியவற்றைக் காக்ஷிக்கும் விற்பனைக்கும் வைத்து உதவினார்கள்.

அதேபோல் சங்கத்தின் தையல் வகுப்பை, திறம்பட நடத்தும் உபாத்தியாயினி, ஸ்ரீமதி ராஜேச்வரியம்மாள் தான் தைத்த சில கவுன்களையும், தன் மாணவிகள் தைத்த கவுன்களையும் சங்கத்திற்கு அன்பளிப்பாக அளித்து உதவினார்கள். ஸ்ரீமதிகள். R. A. ஜானகியம்மாள் கைகுட்டைகள் தைத்து அளித்தார்கள். G. R. ஜெயலக்ஷ்மி சில கவுன்கள் தைத்துக் கொடுத்தார்கள். M. O. ஜானகியம்மாள் சக்கரை மிட்டாய்கள் செய்துகொடுத்தார். மேற்படி அன்பளிப்பின் மூலம் வஸூலான தொகையை இலவசச்சம்பள நிதியில் சேர்க்கப்பட்டது. திருவல்லிக்கேணியில் இதுவரை நடந்திராத இத்தகைய சிறந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு உபதலைவி ஸ்ரீமதி வேதம்மாள் ரங்கநாதம் செட்டியார் அவர்கள் தமது வஸந்த பங்களாவை உதவி மகிழ்ந்தார்கள். பல அங்கத்தினர்கள் இந்த நிகழ்ச்சியில் வெகுதிறமையாக உழைத்ததானது மிகவும் பாராட்டத்தக்கதாகும். உதவிபுரிந்தசகலருக்குஞ்சங்கம்தன்நன்றியைத்தெரிவிக்கிறது.

இதர நிகழ்ச்சிகள்

நவம்பர் 9உ உபதேசரத்னமாலை சாற்றுமுறை, 10உ தீபாவளி விழா, 13உ துலாகாவேரித்தாயாரின் கல்யாணம், 17உ விவாதசப்பை ஆரம்ப விழா, 20உ கைசிக ஏகாதசி பஜனை, 25உ இசை கைங்கர்யம், 26உ டைப்ரைட்டிங் வகுப்பு திறப்பு விழா, 27உ அடைக்கலப்பத்து ஆரம்பம், 28உ சிறுவர் விருந்தும் குதூகல நிகழ்ச்சிகளும், 29உ திருக்குறள் மகாத்மிய உபந்யாஸமும்—நவம்பர் மாதத்தைச் சிறப்பித்தன.

24-11-50 முதல் தமிழ் நாடெங்கும்
ஆரம்பம்

ப்ரதிபாவின்
சொப்பன சுந்தரி
தமிழ்

அஞ்சலி தேவி, நாகேஸ்வரராவ்
சிவராவ் முதலியோர் நடித்தது

டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

மதராஸ் ஸிடி: நேஷனல் பிக்சர்ஸ்
தமிழ் நாடு, மைசூர்: தல்லம் பிக்சர்ஸ்
ஆந்திரா, ஸீடட் & நைஜாம்: பூர்ணா பிக்சர்ஸ்

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.